Vol.23 | No. 1 | January 2019

The Official Organ of the Diocese of Thuckalay



# இறையருள்




16.12.2018 Madurai Mission Christmas Celebration



26.12.2018 Catechism Soosaipuram Forane Competition



20.12.2018 Laity Council First Meeting



**B.Ed. Graduates Orientation Programme 9.12.2018**



**Foundation Stone at Kalluvillai 17.12.2018**




**Crisma Stall at Vettumani 2[illegible].12.2018**



**SMYM Tamilnadu Regional Election 9.12.2018**

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 23 No :01 JANUARY 2019

# இறையருள்
# IRAIARUL



## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 05 |
| ஆயர் சுற்றுமடல் | 06 |
| உயர் பேராயர் மடல் | 10 |
| மறைக்கல்வி | 14 |
| சிறுமலர் இயக்கம் | 18 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 19 |
| இளையோர் இயக்கம் | 20 |
| இல்வாழ்வு இயக்கம் | 24 |
| சமூக சேவை சங்கம் | 26 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 28 |
| கல்வி நிறுவனம் | 30 |
| அல்போன்சா கல்லூரி | 34 |
| சீனாய் தியான இல்லம் | 36 |
| மறைவட்டச் செய்திகள் | 38 |
| செங்கோட்டைச் செய்திகள் | 41 |
| Birthdays & Feastdays | 43 |
| Bishop's Engagements | 44 |

*Editorial Board*

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281130
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/89/2018

31 December 2018

Dears,

Greetings from Bishop's House, Thuckalay! I am sure you had a meaningful celebration of Christmas in your respective settings. We have just entering a new year. Let me greet you, dear Fathers, a grace-filled New Year. May you experience God's choicest blessings throughout the year 2019!

Liturgically, the Syro-Malabar Church keeps the feast of Denha on 6 January and the Mission Week from 6 January to 12 January 2019. Denha is a Syriac word which means dawn or sunrise. Latin Church uses the term Epiphany, originating from Greek and means Appearance. Denha refers to the public manifestation of the Holy Trinity at the Baptism of Jesus, where God the Father testified Jesus as the Son of God and the Holy Spirit descended upon Jesus in the form of a dove (Cf. Mt 3:17: Mk 1:11; Lk 3:22). Thus the Holy Trinity is revealed to the world, so also Jesus as the Incarnate Son of God.

Denha is the feast of the great revelation of Jesus as the light of the world. Jesus is the real Sun that dawned in the world through Incarnation. During the hidden life of Jesus in Nazareth, the public did not recognize Him as the real Sun who illuminates the whole of humanity. He was manifested to the public by God the Father at His Baptism as we have seen above.

Zachariah, father of John the Baptist, prophesied "...when the day shall dawn upon us from on high to give light to those who sit in darkness and in the shadow of death to guide our feet into the way of peace" (Lk.1:76-79). St Ephrem (+373) has written extensively about the coming of the saviour in terms of new dawn or sunrise. According to him Mary's conception was on April 10, and Jesus' birth was on January 6. During this time there had no great difference between the feast of Nativity and the feast of Denha and he wrote a hymn about it, entitled Hymnon the Nativity. Narsai wrote a memra about the Denha of Jesus under the title "The Hymn of the Denha of the Lord"

As you are well aware, the members of the Syro-Malabar

Church celebrate Denha in two ways – as Pindiperunnal, which means banana trunk feast or as Rakkuliperunal, which means feast with a night bath.

In northern regions of Kerala like Thrissur, the feast of Denha is popular as Pindiperunnal. On the previous night of Denha, a decorated plantain trunk is erected in front of houses with many torches attached to it. The family members go around it singing a Syriac hymn "El Paiya," which means "God is light." Special dishes are also prepared during this time. Special prayers conducted in the churches.

In southern areas like Pala, this feast is popular as Rakkuliperunal – feast with night-bath in river. In imitation of Jesus' Baptism, people used to perform a ritual bath in nearby ponds or rivers singing psalms and other religious hymns on the previous night (ravu) of the feast of Denha.

Similar customs are found in other eastern Churches too. In the Coptic Church Denha was celebrated on the banks of river Nile, in the first millennium. Russian Orthodox Christians too keep similar practices. Priest blesses the water, as symbolic reminder of the purification of all water sources by the baptism of Jesus. At the end of the ceremony, people would jump into the water as a symbolic ritual of purification and a reminder of the baptism of Jesus and their own.

It is important to recognise that both the forms of celebrations refer to the great presence and action of God in Jesus. The season of Denha - Manifestation - also begins with the feast of Denha. And the prayers and readings refer to the public ministry of Jesus. Let us celebrate this feast in a worthy manner with our people.

The Fridays of this period are the commemoration days of the saints who bore witness to the mystery of revelation. These holy Fathers are the cornerstones on which is founded the witnessing value of Christ in this world. In this Friday-memorial, St John the Baptist, Apostles Peter and Paul, the Evangelists, St Stephan the first martyr, the Greek Doctors, the Syrian Doctors, the Patron Saint of the Church and all the Departed are remembered in this order according to the number of the weeks. Thus, the following Friday commemorations perfectly cope with the spirit of the season

Regarding the missionary week or preshithavaaram, our beloved Cardinal Mar George Alencherry, Major Archbishop of Syro-Malabar Catholic Church says: "We recognize that the vocation of the

Church is to be a missionary and we have to rekindle the embers of our apostolic zeal. We have to continue our prayers for the showering of the gifts of the Holy Spirit on the Church as well as on us." According to him, the youth is the hope of the Church. She wants to appropriate the special talents of the Youth like their imagination and creativity for the missionary apostolate of the Church. This mission week should help to increase missionaries in our Church and to help those missionaries who are working in the missions to do their ministries with full dedication. We celebrate the mission week especially to respect, honour and remember the love of the martyrs who gave their life for their mission.

For St John Paul II, being essentially missionary does not mean merely that the Church has a universal mission to all humanity. Instead, it means that in her constitutive reality, in her soul, and thus it could be said in her very psychology, she possesses a dynamism that concretely unfolds in preaching the Gospel, in spreading the faith and in calling to conversion. This interior drive, intimately linked to her mission, comes from the Holy Spirit and is therefore part of her mystery. The dynamism that comes from it is thus expressed as a distinctive characteristic of the whole Church. This is shown in a concrete and effective way especially in those who, starting with the apostles, go to regions far from their land for the sake of the Gospel.

The Pope acknowledges the fact that all the members within the Church are not called upon to go to the mission lands. Even if all are not called personally to go to the mission lands, each one in the Church and with the Church has the task of spreading the light of the Gospel, according to the saving mission passed on by the Redeemer to the ecclesial community. Indeed, all are called to cooperate in this mission.

In the last decades, Syro-Malabar Church has recognized this truth and has been sending missionaries to different parts of the world. The missionary Eparchies, beginning with Chanda established on 31 March 1962, have played great role in spreading the message of Jesus Christ. Our Eparchy too was originally begun as a mission territory of the Archdiocese of Changanassery. Two years ago, Pope Francis extended the territory of our Eparchy asking us to spread the message of Christ that we have received from the missionaries to the wider population within the State of Tamilnadu. We have al-

ready begun our missions in Madurai and Tirunelveli. I am sure in this New Year we will be able to expand our missionary work to other parts of our State.

Hence, it is our duty to encourage our people and mission league children to become part of this mission of the Church. The Syro-Malabar mission week that we are going to celebrate in our diocese is on 5 and 6 January 2019 should become a launching pad for our missionary activities in the newly added territories. I invite all of you, dear Fathers, to encourage our people to become part of this venture by contributing their mite in ways that are possible to them so that we can be faithful to our mission.

**CONCLUSION**

We have just celebrated the birth of Jesus. Let the Christmas wish of our Holy Father Pope Francis ring in our ears as we conclude the celebration of Christmas. "May the little child whom we contemplate today in the manger, in the cold of the night, watch over all the children of the world, and every frail, vulnerable and discarded person...May all of us receive peace and consolation from the birth of the Saviour and, in the knowledge that we are loved by the one heavenly Father, realize anew that we are brothers and sisters and come to live as such!"

Yours in Christ Jesus,

George Rajendran SDB
Bishop of Thuckalay

| வரவிருக்கும் நிகழ்வுகள் - ஜனவரி 2019 | |
|---|---|
| ஜனவரி 15 | மறைமாவட்ட விவிலியக் கலைவிழா நிறைவு |
| ஜனவரி 07-18 | சீரோமலபார் ஆயர் பேரவை |
| ஜனவரி 21- 22 | தமிழக ஆயர் பேரவை |
| ஜனவரி 26 | வெள்ளிவிழா சாந்தி நிலையம், பருத்திவிளை |
| ஜனவரி 29 | அருட்தந்தையர் கூடுகை |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Pastoral letter No/GR/37/2018

## ஆயர் திருமுகம்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

இறையேசுவில் அன்பிற்குரியவர்களே,

திருவழிபாட்டு ஆண்டின் மங்களவார்த்தைக் காலத்தில் நாம் இருக்கிறோம். டிசம்பர் 1 முதல் 25 வரையிலான தினங்கள் ஈசோவை நம் இதயத்திலும் மனதிலும் ஏற்பதற்கான நாட்களாக உள்ளன. கிறிஸ்மஸ் விழாவிற்கு முந்தைய இந்த நாட்களை இருபத்தைந்து நோன்பு என அழைக்கிறோம். உலகம் விளம்பும் இன்பங்களை ஒதுக்கி, இறைச்சிப் பொருட்களைத் தவிர்த்து, ஒறுத்தலை ஏற்பதற்கான நாட்கள் இவை. கிறிஸ்து பிறந்ததன் மகிழ்ச்சியை கொண்டாடுவதற்காக நோன்பு ஏற்க வேண்டியதன் அவசியம் என்ன? எனும் கேள்வி இயல்பாகவே எழலாம். மகிழ்ச்சியின் நற்செய்தியை கொண்டாட நோன்பு எதற்கு? எனும் கேள்வியும் வரலாம். நோன்பு என்பது ஆன்மீக தயாரிப்பிற்கான நாட்கள். மிக முக்கியமான நபர்களை வரவேற்க நம் வீடுகளையும் பங்குகளையும் தயார் செய்வது நமக்கு பழகிப்போன ஒன்று. அப்படியானால் அரசர்க்கெல்லாம் அரசரான கிறிஸ்துவை வரவேற்பதற்கான தாயாரிப்புகள் எந்த அளவு பெரிதாக இருக்க வேண்டும்? தயாரிப்பு எப்போதும் தியாகங்களை கோருகிறது. ஆண்டவராகிய கடவுளிடமிருந்து பத்துக் கட்டளைகளைப் பெறுவதற்கு முன், மோசே நாற்பது இரவும் பகலும் உணவும் தண்ணீருமின்றி தவம் இருந்தார் (விப 34:28). ஆண்டவரின் மலையை அடைவதற்காக எலியா நாற்பது இரவும் பகலும் உணவும் தண்ணீருமின்றி நடந்தார் (1 அர 19:8). "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (மத் 16:24) என ஈசோ நமக்கு அறிவுறுத்தினார்.

ஆகையால், கிறிஸ்மஸ் விழாவுக்கு தயாரிப்பாக நாம் ஏற்கும் 25 நோன்பு, குழந்தை ஈசோவை உள்ளத்தில் ஏற்பதற்கான நாட்களாக உள்ளன.

மங்களவார்த்தை காலத்தின் இறுதியில் நாம் கிறிஸ்து பிறப்பு காலத்தில் நுழைவோம். நம் மீட்பரின் பிறப்பை மகிழ்ச்சியோடு கொண்டாடவும் செய்வோம். குளிர்காலத்தில் வரும் கிறிஸ்மஸ், முரண்களின் கலவை எனலாம். பகலுக்கு நேரம் குறைவு. அதனால் சூரிய வெளிச்சம் குறைவாக கிடைக்கும் நாட்கள். அவ் வேளையில் நாம் ஒளி விளக்குகளால் வீடுகளையும் வீதிகளையும் அலங்கரிக்கிறோம். குளிர் காலத்தில் வெப்பம் குறைவு. நாமோ நெருப்பு பற்றவைத்து கிறிஸ்மஸ் அனுசரிக்கிறோம். ஆண்டின் முடிவில் வாழ்வின் தொடக்கமாக குழந்தையாகப் பிறந்தவரின் கொண்டாட்டம் நிகழ்கிறது. "அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது; இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை" (யோவா 1:5) என்று யோவான் நற்செய்தியில் நாம் வாசிக்கிறோம். சூரியனின் வெளிச்சமானது, உலகைப் பரப்புகிறது. உள்ளுக்குள்ளே எரியும் நெருப்பால் அது உலகுக்கு ஒளி கொடுக்கிறது. அதைப் போன்று நாமும் இறையன்பால் உள்ளுக்குள் எரிந்து வெளிச்சமாக உருமாறிட அழைக்கப்படுகின்றோம்.

"இதோ ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவீர். இம்மானுவேல் என்றால் 'கடவுள் நம்மோடு' என்பது பொருள்" (மத் 1:23). நம்மோடு வசிக்க வந்திருக்கும் கடவுளின் உறவை அறிந்து அவரின் பிரசன்னத்தை உள்ளார உணர முயல்வோம்.

மழலை ஈசோ மன்னிப்பின் செய்தியைச் சுமந்து வருகிறார். ஒருவர் மற்றவரை மன்னித்து வாழும் போது, அவர் அருளும் மன்னிப்பை நம்மால் ஏற்க இயலும். "எங்களுக்கு எதிராக குற்றம் செய்வோர் அனைவரையும் நாங்கள் மன்னிப்பதால் எங்கள் பாவங்களையும் மன்னியும்" (லூக் 11: 4) என்பதே ஆண்டவர் கற்பித்த செபம் தரும் செய்தியாகவும் உள்ளது. கடவுளின் உருவில் படைக்கப்பட்ட ஒரே தந்தையின் பிள்ளைகளாக மானிடர் யாவரும் உள்ளனர் என்பதை கிறிஸ்மஸ் உணர்த்துகிறது. பல்வேறு மதங்களைச் சேர்ந்த மனிதர் யாவரும் அமைதியிலும் மகிழ்ச்சியிலும் சேர்ந்து வாழும் கலையை இந்தியர்களாகிய நாம் கற்றிருக்கிறோம். பிரிவினையில்

விஷம் ஊட்டும் மதவாதம் சில இடங்களில் தலைதூக்குவதை விதிவிலக்காகக் கொள்வோம். இச்சம்பவங்களைக் கண்டு மனம் துவளாமல், தொடர்ந்து மன்னிப்பின் செய்தியை ஏந்தியவர்களாய் அமைதியில் வாழ, அதன் தூதர்களாக செயல்பட கிறிஸ்மஸ் நமக்கு அழைப்பு விடுக்கிறது. கடைசி இரவுணவின் வேளையில், "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக" (யோவா 17:21) என்னும் ஆண்டவரின் செபம் நமது செவிகளில் முழங்குவதாக.

கிறிஸ்மஸ் தியாகத்தின் செய்தியையும் நமக்குக் கற்பிக்கிறது. சிறு சிறு பரிசுகளை பிறரோடு பகிர்ந்திடும் போது அது வெளிப்படுகிறது. கொடுப்பதிலே அடங்கியுள்ள தியாகத்தையும் அதன் பயனாய் விளையும் மனமகிழ்ச்சியையும் கிறிஸ்மஸ் அறிவுறுத்துகிறது. கடவுளின் மாட்சியில் விளங்கிய ஈசோ, தமது கடவுள் தன்மையிலிருந்து இறங்கி வந்து மானிடனாகப் பிறந்தார். இதைக் குறித்து தூய பவுல், "கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாய்க் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்" (பிலி 2:6 7) எனக் கூறுகிறார். மனிதராகப் பிறந்த ஈசோவை உள்ளார அறிதலே அவரை உள்ளத்தில் ஏற்க ஒரே வழி. புத்தகங்களோ பிற படிப்பினைகளோ அவ்வறிவையும் அனுபவத்தையும் தந்திடாது. இதயம் உணரும் இதமான அனுபவம் ஒன்றே மனிதராதல் என்னும் மறைபொருளின் உண்மையை அறிவதற்கான வழி.

கிறிஸ்தவர்களுக்கானது மட்டுமல்ல கிறிஸ்மஸ். அது அகில உலகுக்குமானது. சிறு பறவைகள், மரங்கள் என இயற்கை முழுவதும் கிறிஸ்துவின் பிறப்பில் அகம் மகிழ்கின்றது. கிறிஸ்மஸ் இரவு அன்று விலங்குகளும் பறவைகளும் பேசும் ஆற்றலை கடவுளிடமிருந்து பெற்றன என்றும், அவை கடவுளை புகழ்ந்து பாடின என்றும் பிரஞ்சு கதை ஒன்று கூறுகிறது. இயற்கையை நம்முடைய ஒரு பகுதியாக ஏற்கும் போது உள்ளங்களில் கனவு பிறக்கும். அதன் விளைவாக மானிடர் அனைவரையும் ஏற்று முழுமையாக அன்பு செய்ய

நம்மால் முடியும்.

அரசர்க்கெல்லாம் அரசர் ஏழை பாலனாய் மாட்டுக்கொட்டிலில் எளிமையின் உருவாய் பிறந்தார். அவர் பிறப்பு எளிமையாய் இருந்து என்றால் நாமும் எளிமையை ஏற்க வேண்டாமா? உலகை ஒளிர்விக்கும் கிறிஸ்துவாகும் ஒளியை மனதில் ஏற்க நாம் எழுவோம். நம் குடும்பத்தினருக்கும் நம் சகோதரர் சகோதரிகளுக்கும் கிறிஸ்துவின் ஒளியைக் கொடுப்போம். அவர்களுக்காக செபிப்போம். அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். குழந்தை ஈசோவின் ஆசி உங்களோடு என்றும் இருப்பதாக.

என்றும் ஈசோ மெசியாவில்

✝ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

## ஐக்கிய கிறிஸ்தவ பேரவை கிறிஸ்துமஸ் கூடுகை

குமரிமாவட்ட ஐக்கிய கிறிஸ்தவ பேரவையின் கிறிஸ்துமஸ் கூடுகை 20 டிசம்பர் அன்று நாகர்கோவில் இரட்சண்ய சேனை ஆலயத்தில் வைத்து ஐக்கிய கிறிஸ்தவபேரவைத் தலைவர் ஆயர் நசரேன் சூசை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பொறுப்பாளர்கள் கிறிஸ்மஸ் நிகழ்சிகளை வழங்கினர். கூட்டமானது காலை 10.30 மணிக்கு தொடக்க செபத்துடன் ஆரம்பமானது. செயலர் திரு. ராஜ் அவர்கள் கடந்த ஆண்டைய செயல்பாடுகளை அறிக்கையாக சமர்ப்பிக்க, அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது. தொடர்ந்து ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் மற்றும் சிறப்பு விருந்தினர்களும் கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினர். இக்கூடுகையில் கிறிஸ்தவ பேரவை நல்லிணக்கம் மற்றும் அமைதியை நிலைநாட்ட வலியுறுத்தப்பட்டது. தொடர்ந்து குமரி மாவட்ட சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டி உறுதிமொழி எடுக்கப்பட்டது. பின் நடைபெற்ற விருந்துடன் கூடுகை இனிதே நிறைவுற்றது.

# உயர் பேராயர் சுற்றுமடல்

சீரோ மலபார்த் திருத்தொண்டு வாரம் (2019 ஜனவரி 6 - 12)

சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர்,
மார் ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி அவர்கள்,
அனைத்து பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் குருக்களுக்கும்
இருபால் துறவியருக்கும் பொதுநிலையினருக்கும் எழுதுவது.
நம் ஆண்டவரின் அருள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

தென்காத் திருநாள் முதல் தொடர்ந்து வரும் ஒரு வார காலம், அதாவது ஜனவரி 6 முதல் 12 ஆம் தேதி வரை, 'சீரோமலபார் திருத்தொண்டு வாரமாக' அனுசரிக்கப்படுகிறது. இவ்வேளையில், திருத்தொண்டு வாரத்தைப் பற்றிய சில சிந்தனைகளை உங்களோடு பகிர்ந்திட விழைகிறேன். தெனகத் திருநாள் அன்று ஈசோ தம்மையே உலகிற்கு வெளிப்படுத்தித் தமது பணிவாழ்வை ஆரம்பித்தார். அவர், ஏழையரிடமும் ஒதுக்கப்பட்டவர்களிடமும் தனி அன்பையும் இரக்கத்தையும் காட்டினார் என நற்செய்தி நூல்கள் சாட்சியப் படுத்துகின்றன. தம்மையே உலகிற்கு வெளிப்படுத்திய ஈசோவின் மறையுடலாகிய திருச்சபையானது கிறிஸ்துவின் பணியில் இடையீடின்றி பங்கேற்கிறது. ஆகவேதான், வத்திக்கான் திருச்சங்க ஏடான, திருச்சபையின் நற்செய்திப்பணியில் (Ad Gentes) "திருச்சபை, திருத்தொண்டை தனது இயல்பாகப்பெற்றுள்ளது" (AG2) எனக் கூறுகிறது. இவ்வியல்பை உள்ளார ஏற்றுக்கொண்டு, மேன்மேலும் நற்செய்தி அறிவித்தலைக் குறித்த அறிவைப் பெற்றவர்களாக ஆர்வத்துடன் நற்செய்திப்பணியில், சீரோ மலபார்த் திருச்சபையில் ஒவ்வொரு பிள்ளைகளும் ஈடுபட வேண்டும் என நான் அறிவுறுத்துகிறேன். ஒவ்வொருவரும் தத்தமது வாழ்க்கை நிலைக்கும் சூழலுக்கும் ஏற்ப மனமுவந்து இதைச் செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறேன்.

இன்றைய உலகில் விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவரின் வாயிலாக ஈசோவின் திருமுகமானது ஒளிர்கிறது. "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 15:16) என்பது ஈசோ நமக்குப் பிறப்பித்தக் கட்டளை.

ஈசோவின் இக்கட்டளையை எங்கும் எப்போதும் நிறைவேற்ற வேண்டும். தீமையின் சக்திகள் திருச்சபையை தந்திரபூர்வமாக தாக்கிக் கொண்டிருக்கும் இக்காலக்கட்டத்தில் நாம் ஆன்மீகத்தில் உறுதி பெற வேண்டியது அவசியமாக இருக்கிறது. குடும்பத்தின் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றுவதில் பெற்றோர் தனிக்கவனம் செலுத்த வேண்டும். நம்முடைய மூதாதையர் விட்டுச்சென்ற விசுவாசத்தின் ஒளிச்சுடரை கெடாமல் பிரகாசிக்கச் செய்ய வேண்டியது நம் கடமை. நமது விசுவாசத்தின் தந்தையாகிய புனித தோமையாரிடம் விளங்கிய விசுவாச ஆர்வமும் துணிச்சலும், விண்ணகத்தை நோக்கிய நம் பயணத்தில் ஏற்படும் இடையூறுகளையும் தடைகளையும் வென்று முன்னேற வலிமை தருவனவாக.

திருத்தொண்டு வார கொண்டாட்டங்கள் வழியாக உலகில் மாற்றம் ஏற்படுத்த நற்செய்தியின் வல்லமையை அனுபவித்து அறிவோமாக! அதன் வழியாக ஆண்டவரின் நற்செய்தி சென்றடையாத பகுதிகளில் நற்செய்தியை அறிவிக்கும் ஆர்வம் பெறுவோமாக! தொடக்கக் கிறிஸ்தவர்களின் மாதிரியை பின்பற்றி, நமக்குள்ளே ஒப்புரவையும் சகோதரத்துவத்தையும் வளர்ப்போம். நற்செய்தியைப் பகிர்வதில் மனம் மகிழ்வோம். ஈசோவின் மீட்பின் நற்செய்தியை பறைசாற்றுவதற்கும் பரப்புவதற்கும் அவசியமாக இருக்கும் திட்டங்களை மறைமாவட்ட அளவிலும், பங்களவிலும் பல்வேறு பக்த சங்கங்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள வேண்டும். அப்போது இந்த திருத்தொண்டு வார கொண்டாட்டங்களானது பொருள்மிக்கதாகவும், பயன்மிக்கதாகவும் அமையும். நாம் கொள்ளும் திருத்தொண்டு ஆர்வமும் நற்செய்திப் பணி மீதான பற்றும் நமது விசுவாச வாழ்வை கனிகளால் நிரப்பும்.

இந்தியாவின் பல பகுதிகளிலும்வெளிநாடுகளிலும் பணிசெய்வதெற்கென ஏராளமான திருத்தொண்டுப் பணியாளர்களை நம்முடைய திருச்சபையானது உருவாக்கி இருக்கிறது. திருத்தந்தை அனுமதித்துத் தந்த எல்லை விரிவாக்கத்தின் பலனாக உருவான ஷம்ஷபாத் மற்றும் ஒசூர் மறைமாவட்டங்கள் சீரோ மலபார்த் திருச்சபையின் திருத்தொண்டுப் பணியின் கனிகள் என்பதை நினைவில் கொள்வோம். அவை, மேலும் ஈசோவின் நற்செய்திக்காக உழைக்க நம்மை அழைக்கின்றன. திருத்தொண்டு

வார கொண்டாட்டங்களின் வேளையில் இம்மறைமாவட்டங்களை நாம் சிறப்பாக நினைவில் கொள்வோம்.

இந்தியாவில் பலதரப்பட்ட நற்செய்திப்பணிகளை மேற்கொள்ள உந்துசக்தியாக இருப்பது நம்முடைய திருத்தொண்டு ஆர்வம் அன்றி வேறில்லை. இவ்வேளையில் அனைத்துத் திருத்தொண்டுப் பணியாளர்களையும் நினைவு கூருவோம். ஆழ்ந்த விசுவாசத்தாலும், நற்செய்தித் தரும் ஆற்றல்மிகுத் துணிச்சலாலும் துளிர்விடும் இறையழைத்தல்களுக்கு பக்கபலமாக இருப்போம். 'சீரோ மலபார்த் திருத்தொண்டு' (Syro Malabar Mission) என்னும் பெயரில் காக்கனாடு, மவுண்ட் செயின்ட் தோமஸ் இல் செயலாற்றி வரும் அலுவலகம் குறித்து நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் என எண்ணுகிறேன். இவ்வலுவலகம் 230 குருமாணவர்களுக்கும் 34 புகுநிலை பெண்துறவறத் தாருக்கும் உதவுகிறது. இவர்கள் பல மறைமாவட்டங்களிலாக வாழும் 51 லட்சத்திற்கும் மேற்பட்ட விசுவாசிகளுக்கு ஆன்மீகப் பணிபுரிவதற்கான தயாரிப்பில் ஈடுபட்டுள்ளார்கள். இதற்கு புறம்பாக, நற்செய்திப்பணிக்கு உதவுகின்ற பிற திட்டங்களுக்கும் இவ்வலுவலகம் உதவுகிறது. உங்கள் செபங்களும் தாராள மனதும் இவ்வலுவலகம் திறம்பட ஆக்கபூர்வமாக செயல்பட பேருதவியாக இருக்கும். நற்செய்தி அறிவித்தலில் இவ்வலுவலகம் வகிக்கும் பங்கு பெரிதும் போற்றுதற்குரியது. திருத்தொண்டு வார கொண்டாட்டங்கள் வழியாக கிடைக்கப்பெறும் பொருளானது இவ்வலுவலக செயல்பாட்டிற்கென்று மட்டும் ஒதுக்கப்படுகிறது.

"நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்" (யோவா 11:16) என்னும் நம்முடைய தந்தையாகிய மார் தோமாவின் வார்த்தைகளை இதயத்தில் சுமப்போம். திருத்தொண்டுப்பணிகளை குறித்து அறிவோம்; அப்பணியை நேசிப்போம்; திருத்தொண்டுப் பணியாளர்களுக்காக செபிப்போம்; திருத்தொண்டு நடக்கும் பகுதிகளை சந்திப்போம்; அவர்கள் மேற்கொள்ளும் பணிகளுக்காக இயன்றவரை பொருளுதவி செய்வோம். இவ்வாறாக, விசுவாசத்தால் ஒளியூட்டப்பட்டவர்களாக வலிமையடைவோம்.

தந்தை ✠ மகன் ✠தூய ஆவியின் ✠பெயரால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

கர்தினால் ஜார்ஜ் ஆலஞ்சேரி
சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர்

---

காக்கனாடு மவுண்ட் செயின்ட் தோமஸ், தலைமைச் செயலகத்திலிருந்து, நவம்பர் 5, 2018 அன்று வழங்கியது.

குறிப்பு:

1. இச்சுற்றுமடல், டிசம்பர் 30, 2018 அன்று திருப்பலிக்கிடையே அனைத்து பங்குகளிலும், சிற்றாலயங்களிலும் வாசிக்க வேண்டும்.

2. சம்மந்தப்பட்டவர்கள் திருத்தொண்டு வாரத்தை அர்த்தமுள்ள முறையில் பங்குகளிலும் நிறுவனங்களிலும் கொண்டாட ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. ஒருவாரகால திருத்தொண்டு வாரக் கொண்டாட்டத்தின் வழியாக கிடைக்கும் நிதியை காக்கனாடு, மறைமாவட்ட மைய அலுவலகத்தில் ஒப்படைக்கவும். திருத்தொண்டு நிதியை, மவுண்ட் செயின்ட் தோமஸ் இல் செயல்படும் சீரோ மலபார் Mission Office க்கு, பிப்ரவரி 28, 2019 க்கு முன் ஒப்படைக்க வேண்டும்.

---

**கைக்காரர் மற்றும் கணக்கர்களுக்கான கூட்டம்**

கைக்காரர் மற்றும் கணக்கர்களுக்கான கூட்டம் டிசம்பர் 9 அன்று சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. ஆயர் அவர்களின் தலைமையில் திருப்பலியுடன் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் 54 பேர் கலந்து கொண்டு ஆலய நிர்வாகம் கணக்குகள் பற்றி விளக்கம் பெற்றனர். இதற்காக உழைத்த மறைமாவட்ட ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்களுக்கு நன்றி.

**வெள்ள நிவாரண நிதி**

கேரளாவில் வெள்ளம் பாதிக்கப்பட்டோர்களின் நிவாரணப் பணிக்காக மறைமாவட்ட அளவில் சேகரிக்கப்பட்ட நிவாரண நிதி ரூபாய் 15 இலட்சம் சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்ட ஆயர் மார் ஜோசப் பெருந்தோட்டம் அவர்களிடம் டிசம்பர் 28 அன்று ஒப்படைக்கப்பட்டது. இதற்காக ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி.



# CATECHISM மறைக்கல்வி

"கடவுளது சாயலாக படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள் அவ்வியல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படும்". எபே : (4 24)

அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## கிறிஸ்து பிறப்பு விழா கூடுகை

நமது மறைக்கல்வி தலைமையாசிரியர்கள், ஊக்குவிப்பாளர்கள், மறைவட்ட செயலர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களின் கிறிஸ்மஸ் விழா கூடுகையானது டிசம்பர் 15 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நற்செய்தி நிலையத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை சனில் பந்திசிறைக்கல் அவர்களின் தலைமையிலும், உதவி இயக்குநர் அருட்தந்தை ஷோஜி புத்தன்புரைக்கல் அவர்களின் முன்னிலையிலும் சிறப்பு விருந்தினர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களின் பிரசன்னத்திலும் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது. கிறிஸ்மஸ் கூடுகையானது துய ஆவிப்பாடல் மற்றும் ஜெபத்துடன் ஆரம்பமானது. இயக்குநர் அருட்தந்தை சனில் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினர். சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த குருகுல முதல்வர் அவர்கள் கிறிஸ்மஸ் விழாவை கொண்டாடும் இத்தருணத்தில்நாம் அனைவரும் தாழ்ச்சி மனப்பான்மையுடையவராக இருக்க வேண்டுமென்று உரையாற்றி கேக் வெட்டி கிறிஸ்து பிறப்பு விழா மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார். தொடர்ந்து மறைவட்ட கலைபோட்டிகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களின் பெயர் பட்டியல் மற்றும் போட்டிகளுக்கு தேவையான அனைத்தும் அந்தந்த மறைவட்ட செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது. நற்செய்தி நிலையத்தின் சார்பாக அனைவருக்கும் கிறிஸ்மஸ் பரிசாக டயரி மற்றும் பேனா குருகுல முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது. உதவி இயக்குநர் தந்தை ஷோஜி அவர்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்து செய்தி கூறினர். பின்னர் இயக்குநர் தந்தையின் நன்றியுரையுடன் கூட்டமானது இனிதே முடிவுற்றது.

## மறைவட்ட போட்டிகள்

2018-2019 ஆம் ஆண்டு விவிலிய கலை விழாப் மறைவட்ட போட்டிகள் டிசம்பர் 26 புதன்கிழமை சூசைபுரம், 27 வியாழக்கிழமை ஆறுகாணி, 28 வெள்ளிக்கிழமை தக்கலை-பிலாங்காலை, 29 சனிக்கிழமை மஞ்சாலுமூடு, 31 திங்கட்கிழமை நித்திரவிளை, படந்தாலுமூடு மறைவட்டங்களுக்கும்



நடத்தப்பட்டன. இந்த வருடம் விவிலியக்கலைவிழா மறை வட்ட போட்டிகள் சூசைபுரம் மறைவட்டத்தில் வைத்து நமது மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தார். போட்டிகள் அனைத்தும் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணி வரை 4 அரங்குகளில் நடைபெற்றது. நிறைவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இக்கலை விழா போட்டிகளில் மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அருட்தந்தையர்கள் ஆன்றணி ஜோஸ், டோபின் ஆலப்புரக்கல், ஷோஜோ இருபத்தஞ்சில்சிற, ஜாண் ஜோஸப், ஜோஸ் வயலில், மற்றும் மறைவட்ட செயலர்கள் அருட்சகோதரிகள் லின்ஸ் S.A.B.S, அனிதா S.H, பாவனா F.C.C, அனு S.H, தீபா S.H, அனுபமா S.D ஆகியோர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துகொள்கிறோம்.

## ஆசிரியர்களுக்கான போட்டிகள்

ஆசிரியர்களுக்கான போட்டிகள் மறைவட்ட அளவில் ஜனவரி 26 சனிக்கிழமை படந்தாலுமூடு திரு இருதய மறை வட்ட ஆலய அரங்கில் வைத்து முற்பகலில் மஞ் சாலுமூடு, நித்திரவிளை, படந்தாலுமூடு மறைவட்டங் களுக்கும் பிற்பகலில் ஆறுகாணி, சுசைபுரம், தக்கலை பிலாங்காலை மறைவட்டங்களுக்கும் நண்பகல் 1 மணிக்கு மறைமாவட்ட அளவிலான விவிலிய வினாடி வினாப் போட்டியும் நடைபெறும்

## இசைக்கருவிகள் போட்டிகள்

மறைக்கல்வி மாணவர்களுக் கான இசைக்கருவிகள் போட்டிகள் மறைமாவட்ட அளவில் ஜனவரி 26 சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். அனைத்து மாணவர்களும் கலந்து கொள்ள அன்பாய் கேட்டுக்கொள்கிறேன்.

2018-2019 ஆம் ஆண்டுவிவிலியக் கலைவிழா போட்டிகளில் மறைவட்ட வாரியாக முதல் மூன்று இடங்களை பிடித்த மறைகல்வி நிலையங்களின் பெயர்களும் பெற்ற புள்ளிகளும்:

**Arukani Forane**

| | | |
|---|---|---|
| 1st | Holy Family, Arukani | 124 Points |
| 2nd | St. Thomas, Pathukani | 109 Points |
| 3rd | St. Thomas Church Netta | 86 Points |

**Manjalumoodu Forane**

| | | |
|---|---|---|
| 1st | Little Flower, Manjalumoodu | 100 Points |
| 2nd | St. Thomas, Muzhucode | 64 Points |
| 3rd | Holy Cross Malaicode | 61 Points |

**Nithiravilai Forane**

| | | |
|---|---|---|
| 1st | Jayamatha , Nithiravilai | 113 Points |
| 2nd | St,Antony, Vayalumkarai | 104 Points |
| 3rd | St.Xaviers Varthattu | 99 Points |

**Padathalumoodu Forane**

| | | |
|---|---|---|
| 1st | St. Thomas, Palugal | 114 Points |
| 2nd | St. Mathew, Annikarai | 88 Points |
| 3rd | St.Martin De Pores Kazhuvanthittai | 75 Points |

**Thuck-Pilankalai Forane**

| | | |
|---|---|---|
| 1st | St. Michael's, Kattathurai | 114 Points |
| 2nd | St. Alphonsa, Nagercovil | 70 Points |
| 3rd | St. Mary's Church Thuckalay | 60 Points |

**Soosipuram Forane**

| | | |
|---|---|---|
| 1st | St. Joseph, Soosipuram | 112 Points |
| 2nd | Christ the King Palapailam | 102 Points |
| 3rd | St. James, Mankarai | 90 Points |

**தகவல்கள்**

2018-2019 ஆம் ஆண்டு படந்தாலுமூடு திரு இருதய விவிலிய கலை விழா மறைவட்ட ஆலய அரங்கில் மறைமாவட்ட போட்டிகள் நடைபெறும். மறைவட்ட ஜனவரி 15 செவ்வாய்கிழமை போட்டிகளில் முதல் மற்றும்

இரண்டாம் இடம், நாடகத்தில் முதலிடம், குழுப்பாடலில் முதலிடம், இரண்டாமிடம் பிடித்த மாணவர்கள் கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

அருட்தந்தை சனில் பந்திசிறைக்கல்
இயக்குநர்

---

## மறைமாவட்ட நலவிரும்பிகளோடு கிறிஸ்மஸ் விழா...

மறைமாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகம் (PRO) சார்பில் மறைமாவட்டத்திற்கு பல்வேறு வகையில், பல்வேறு துறை வாயிலாக உதவிபுரிகின்ற மறைமாவட்ட நலவிரும்பிகளோடு இணைந்து முதல் முறையாக கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. 22.12.2018 சனிக்கிழமை மதியம் 2.00 மணிக்கு தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்ற விழாவிற்கு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார். ஒருங்கிணைப்பாளர் பேரருட்தந்தை ஆண்டனி ஜோஸ் அவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றார். புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் திரு. இசையாஸ் கிறிஸ்மஸ் செய்தி வழங்கி சிறப்புரையாற்றினார். திரு. எட்வின்சன் அவர்கள் அனைவரையும் அறிமுகம் செய்து வைத்தார். ஆயர் அவர்கள் தலைமையுரையாற்றி நினைவு பரிசு வழங்கினார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பரைக்கோடு மற்றும் சூசைபுரம் மகளிரின் நடனம் மற்றும் பாடல் இடம் பெற்றது. திரு. சவுந்தரராஜன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது. இந்நிகழ்வில் தக்கலை நண்பர்கள் இயக்க உறுப்பினர்கள், SEEDS திட்ட உறுப்பினர்கள், தொழிலதிபர்கள், பிற மறைமாவட்ட பிரதிநிதிகள், மருத்துவர்கள் என மத பேதமின்றி சுமார் 50 பேர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை மக்கள் தொடர்பு அலுவலர் பேருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தலைமையில் திரு. சௌந்தரராஜ், திரு. எட்வின்சன் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.



# மிஷன் லீக் இயக்கம்

**பொறுப்பாளர்கள் கூட்டம்**

15.12.2018 அன்று கல்லுவிளை மிஷன் லீக் அலுவலகத்தில் வைத்து மாலை 3.30 மணிக்கு இயக்குநர் தந்தை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இயக்குநர் தந்தை அனைவரையும் வரவேற்க செயலர் அறிக்கை வாசித்தார்.

**நிறை குறைகள்**

07.10.2018 அன்று நடைபெற்ற விசுவாச நடைபயணம் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. மொத்தத்தில் விசுவாச நடைபயணம் அனைவரின் சிந்தனையை தூண்டும் விதத்தில் நன்றாக அமைந்தது. சிற்றுண்டி வழங்குவதில் சில தடங்கல்கள் ஏற்பட்டது. தந்தை அவர்கள் கூறும் போது பொறுப்பாளர்களாகிய நமது ஈடுபாடும் சிறு குறைபாடாக அமைந்தது வருத்தத்திற்கு உரியது என்று கூறியதுடன் வரும் நாட்களில் இதற்கான தீர்வுகள் சரி செய்யப்படும் என்றார். கடவுள் நம்மை அழைத்துள்ளார், அதற்காக நாம் தயாராக இருக்க வேண்டும்.

**திருத்தொண்டு வாரம்**

2019 ஜனவரி 1 முதல் 7 முடிய சீரோ மலபார் திருச்சபை கொண்டாடும் திருத்தொண்டு வாரம் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு சேவையுள்ளம் போன்ற நற்குணங்களை வளர்த்துவதாக அமைதல் வேண்டும் என்றார்.

**திருத்தொண்டு வாரம் கொண்டாடும் முறைகள்**

* பங்களவில் சீரோ மலபார் சபை பற்றிய கண்காட்சி நடத்துதல்.
* திருத்தொண்டு பணிக்காக சிறு காணிக்கை மற்றும் நன்கொடைகள் வசூல் செய்தல்.
* திருத்தொண்டு வார வெற்றிக்காக ஜெபம் ஒன்று தயார் செய்து எல்லா வீடுகளிலும் ஜெபமாலை நேரத்தில் ஜெபித்தல்.
* மாணவர்களின் விசுவாச அறிவு வளர்ச்சியை கருத்தில் கொண்டு வினாடி வினா போட்டி மறைமாவட்ட அளவில் நடத்துதல்.
* மறை வட்ட மற்றும் மறை மாவட்ட அளவில் கருத்தரங்கு நடத்துதல்.

* ஜூலை மாதம் ஆண்டு விழா நடத்த வேண்டும்.

**கிறிஸ்மஸ் விழா**

அருட்சகோதரி அமலா FCC அவர்கள் பேசுகையில் தந்தையாம் கடவுள் தம் ஒரே மகனை உலகுக்கு அளித்த நாளே கிறிஸ்மஸ் விழா. ஈசோவை சமர்ப்பித்த அன்பின் வெளிப்பாட்டில் தான் சிறுசிறு ஜெபங்கள் மூலம் குழந்தைகளை விசுவாசத்தில் வளர்த்த உதவிடல் வேண்டும் என்பதை ஒரு அழகிய கதை வாயிலாக எடுத்துக் கூறி கிறிஸ்மஸ் செய்தி வழங்கினார்.

**இறுதி அமர்வு**

கிறிஸ்மஸ் கேக் முறித்து அனைவருக்கும் இயக்குநர் தந்தை அவர்களால் கிறிஸ்மஸ் வாழ்த்து கூறப்பட்டது. இறுதியில் செயலர் அனைவருக்கும் நன்றி கூற இறுதி ஆசீருடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

அருட்தந்தை ஜாண் ஜோசப்
இயக்குநர்

---

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

## குழந்தை ஈசோ இயக்கம்

---

**பொறுப்பாளர்களின் கூட்டம்**

08.12.2018 அன்று மதியம் 2.30 மணியளவில் கல்லுவிளை மறைக்கல்வி நிலையத்தில் வைத்து இயக்குநர் தலைமையில் பொறுப்பாளர்களின் கூட்டம் ஜெபத்துடன் ஆரம்பமானது. பின் விவிலிய வாசகம் வாசித்த பின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மானங்கள்**

* கலைப்போட்டிகள் பிப்ரவரி மாதத்தில் நடைபெறும்
* குழுப்பாடலுக்கான குறுந்தகடு வழங்கப்பட்டது
* Statistics Form அனைவருக்கும் வழங்கப்பட்டது
* கிறிஸ்மஸ் குலுக்கலுக்கான கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை அனைவருக்கும் வழங்கப்பட்டது.

**கிறிஸ்மஸ் கேக்**

இறுதியாக இயக்குநர் கிறிஸ்மஸ் கேக் வெட்டி கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியை வழங்கினார். இறுதி ஆசீருடன் கூட்டமானது இனிதே நிறைவுற்றது.

அருட்தந்தை ஜோமோன் மங்கலமடம்
இயக்குநர்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

"நிரூபிக்கப்படும் வரை நிராகரிக்கப்படுவாய் ! நிரூபி அங்கீகரிக்கப்படுவாய்!"

**கஜா புயல்**

கஜா புயல் காரணமாக தமிழ்நாட்டின் பல இடங்களில் பேரழிவுகளும், மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டன. இவை கருத்தில் கொண்டு தக்கலை மறைமாவட்ட இளையோர்கள் சார்பாக நிவாரண உதவி



வழங்குவதாக இயக்குநர் தந்தை அவர்களால் தீர்மானிக்கப்பட்டது. 03.12. 2018 அன்று நாகர்கோவில், பனிச்சமூடு, அழகியமண்டபம் ஆகியபகுதிகளில் 8 குழுக்களாக நிவாரண உதவி பிரிவு நடத்தப்பட்டது. ஆலயங்கள் மற்றும் பள்ளிக்கூடங்களில் இருந்து பொருட்கள் தந்து உதவினார்கள்.

**பட்டுக்கோட்டை**

தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை என்னும் கிராமத்தில் நிவாரண உதவி வழங்குவதற்காக 11.12.2018 அன்று காலை 8.00 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் ஜினோ, ஜெசின், அஜித், அஜி ஆன்றோ ஆகியோர் கொண்ட குழுவால் சேதமடைந்த பகுதியை பார்வையிட்டு அப்பகுதி மக்களுக்கு நிவாரண உதவி பொருட்கள் வழங்கினார்கள்.

**Chris Fest**

கிள்ளியூர் தேவமாதா ஆலய இளையோர்கள் சார்பாக 2nd Chris Fest -2K18 (கலைப்போட்டிகள்) 16.12.2018 அன்று நடத்தப்பட்டது. 150 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் மற்றும் இளையோர்களும் போட்டியில் பங்கேற்று சிறப்பித்தார்கள். சிறப்பு விருந்தினராக அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களும், சூசைபுரம் மறைவட்ட தலைவர் ஸ்டார்வின் அவர்களும், அருட்சகோதரி ராணி மரியா அவர்களும் கலந்துக் கொண்டார்கள். மிகவும்

விறுவிறுப்பாக போட்டிகள் நடைபெற்றன. குறிப்பாக இளையோருக்கான Mobile Photography, Mannequin Challenge போன்றவை மிகச் சிறப்பாக நடைபெற்றன.

| | |
|---|---|
| முதல் பரிசு | காரோடு |
| இரண்டாம் பரிசு | சூசைபுரம் |

மறைமாவட்ட துணைத்தலைவர் அபிமோள் மற்றும் மறைமாவட்ட துணைச்செயலர் ஜெசின் ஆகியோர் மேற்பார்வை செய்தார்கள். சுமார் 4.30 மணியளவில் விழா இனிதே நிறைவுபெற்றது.

**SMYM**

சுற்றுலா

08.12.2018 அன்று இராமநாதபுரம் மறைமாவட்ட இளையோர்கள், உலக சீரோ மலபார் இளைஞர் இயக்க பொறுப்பாளர்கள் மற்றும் தக்கலை மறைமாவட்ட



பொறுப்பாளர்கள் இணைந்து கன்னியாகுமரி பெயர் பெற்ற இடங்களாகிய ஆரல்வாய்மொழி, பத்மநாதபுரம் கோட்டை, திருவள்ளுவர் சிலை, விவேகானந்தர் பாறை, தேவசகாயம் பிள்ளை வாழ்ந்த இடங்கள், இயற்கை பூங்கா என ஒருநாள் பார்வையிட்ட பின்னர் தக்கலை சங்கமத்தில் தங்கினர்.

தேர்தல்

09.12.2018 அன்று காலை 9.00 மணிக்கு இராமநாதபுரம், ஒசூர், தக்கலை ஆகிய மூன்று மறைமாவட்டங்கள் இணைந்து தமிழ்நாடு Region தேர்தல் நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டது. SMYM Global இயக்குநர் அருட்தந்தை ஜோசப் ஆலஞ்சேரி, தமிழ்நாடு Region இயக்குநர் அருட்தந்தை விஜோ பாலாயில், தக்கலை மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ், SMYM Global பொறுப்பாளர்களாகிய துணைத் தலைவர் அஞ்சனா, செயலர் வினோத்



ஆகியோர் முன்னிலையில் தேர்தல் நடைபெற்றது. நமது மறைமாவட்டத்திலிருந்து தமிழ்நாடு Region பொறுப்பாளர்களாக

| | |
|---|---|
| துணைத்தலைவர் | ஜினோ |
| பொதுச் செயலர் | ஜெசின் |
| செயலர் | அஜீஷ் |
| கவுன்சிலர் | அபிமோள் |

ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**ஆயர்**

தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் காலை 10.00 மணிக்கு கூட்டத்திற்கு வருகை தந்தார். புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு Region பொறுப்பாளர்களுக்கு வாழ்த்துக்கள் மற்றும் தன் கடமைகளை சிறப்பாக செய்ய வேண்டும் என்று ஆசியுரை கூறினார். பொறுப்பாளர்கள் ஆயர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பின்னர் ஆயரின் இறுதி ஆசீர்வாதத்துடன் கூட்டமானது மதியம் 1.00 மணிக்கு இனிதே நிறைவுபெற்றது.

**YouthChris**

23.12.2018 அன்று தக்கலை மறைமாவட்ட இளையோர்கள் சார்பாக கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விழாவானது இயக்குநர் தந்தை அவர்கள் தலைமையில் படந்தாலுமூடு திரு இருதய கலை அரங்கத்தில் வைத்து மிக சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கலை நிகழ்ச்சிகள், கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்திகள், கிறிஸ்மஸ் தாத்தா நடனம் என விழா மெருக்கேற சிறப்பு விருந்தினராக முக்கூட்டுக்கல் இளம் குருமட ஆன்மீக அருட்தந்தை மேத்தியு குழிஞ் ஞாலில் அவர்கள் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார். இளையோர்கள் தங்கள் கலை திறமைகளை வளர்ப்பதற்காக (உங்கள் வரிகள் - உங்கள் இசை - உங்கள் குரல்) என மாறுபட்ட கிறிஸ்மஸ் கரோல் போட்டி நடத்தப்பட்டது. காட்டாத்துறை இளையோர்கள் முதல் பரிசு பெற்று மகிழ்ந்தனர். கேக் வெட்டி கிறிஸ்மஸ் நடனத்துடன் கூட்டமானது இனிதே நிறைவுபெற்றது.



குடில் போட்டி

24.12.2018 அன்று மஞ் சாலுமூடு மறைவட்டம் சார்பாக 'எளிமை' என்னும் தலைப்பில் மறைவட்ட பொறுப்பாளர்கள் முன்னிலையில் 8 ஆலயங்களில் குடில்போட்டிகள் நடத்தப்பட்டது. அதன் பரிசு விபரம்

| | |
|---|---|
| I | மஞ்சாலுமூடு |
| II | காரோடு |
| III | களியல் |
| III | முழுக்கோடு |

**DOCAT**

30.12.2018 அன்று மஞ் சாலுமூடு மறைவட்டம் சார்பாக மறைவட்டக் கூடுகை மதியம் 2.00 மணிக்கு தூய ஆவி பாடலுடன் ஆரம்பமானது. அருட்தந்தை ஜேம்ஸ் அவர்கள் தொடக்கவுரையாற்றினார். அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் இயக்கத்தை குறித்தும், செயல்படும் விதம் குறித்தும் விளக்கம் அளித்தார். செயலர் பபிஷா DOCAT புத்தகம் குறித்து விளக்கம் அளித்தார். இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் DOCAT புத்தகம் வெளியிட காரோடு ஆலய அருட்தந்தை ஜேம்ஸ் மற்றும் மறைவட்ட தலைவர் விஜில் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். குடில் போட்டிக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விழா கொண்டாடப்பட்டது. 82 இளையோர்கள் இக்கூடுகையில் கலந்துக் கொண்டனர். மறைவட்ட துணைத் தலைவர் வர்ஷா மற்றும் பொருளர் மெரின் சுஜித் இந்நிகழ்வை மிக அழகான முறையில் ஒருங்கிணைத்து வழிநடத்தினார்கள்.

கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

காரோடு புனித சூசையப்பர் தேவாலய இளையோர்கள் சார்பாக 24.12.2018 அன்று ஒரு ஏழை குடும்பத்தை தேர்ந்தெடுத்து கிறிஸ்மஸ் பண்டிகைக்கு தேவையான பொருட்கள் கொடுக்கப்பட்டது. கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக Lucky Draw Prize & Xmas Food Stall நடத்தப்பட்டன.

பபிஷா ஜூலிட்
செயலர்

**கல்லுவிளை புதிய ஆலய அடிக்கல் நாட்டுவிழா**

கல்லுவிளையில் புதிதாக கட்டப்பட இருக்கும் தூய அன்னைத் தெரசா ஆலயத்தின் அடிக்கல் நாட்டு விழா டிசம்பர் 17 அன்று நடைபெற்றது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு மந்திரித்து அடிக்கல் நாட்டினார்.



FAMILY APOSTOLATE
குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

**மது அடிமைகள் மறுவாழ்வு மையம்**

கல்லுவிளையில் மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தில் மது மற்றும் மன நோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்துதலும் நடைபெற்று வருகின்றன. 2019 ஜனவரி மாதம் முதல் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் சிகிட்சை நடைபெறும். மது மற்றும் மன நோய்க்கு சிகிட்சை பெற்ற நோயாளிகள் நலன் பெற்றுள்ளனர். இம்மையத்தில் மாதத்தில் ஒன்றாவது மற்றும் மூன்றாவது திங்கள்கிழமை 12 மணிக்கு மன நல மருத்துவர் வருகை புரிவார். மருத்துவரிடம் ஆலோசனை பெற விரும்புவோர் இந்த இரண்டு திங்கள்கிழமைகளிலும் வந்து ஆலோசனை பெறவும். இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் தலைமையில் அருட்சகோதரி மேரிஜோயிஸ் அவர்கள் வழிகாட்டுதலில் அலுவலகப் பணியாளர்களும், குடும்ப சந்திப்பாளர்களும் சேர்ந்து கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. இம்மையத்தை இயக்குநர் தந்தை அவர்கள் சீருடனும் சிறப்புடனும் செயலாற்றி வருகின்றார்.

**திருமண பயிற்சி வகுப்பு**

திருமண தயாரிப்பு பயிற்சி இருமாதத்திற்கு ஒருமுறை மூன்றாவது வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் பயிற்சி நடைபெறும். இப்பயிற்சி வகுப்புகள் அருட்தந்தையர்கள், மருத்துவர், ஆசிரியர்களாலும் நடத்தப்படுகின்றன. இளையோர்க்கு பயன் உள்ளதாகவும், குடும்ப வாழ்க்கை நன் முறையில் அமைய வகுப்புகள் நடத்தப்படுகின்றன. நிறைவு நாளான ஞாயிறு அன்று மதியம் 2.00 மணிக்கு பெற்றோர்களுக்கான வகுப்பும் நடைபெறும். டிசம்பர் மாதம் நடைபெற்ற பயிற்சியில் 28 இளையோர்கள் பங்கெடுத்து பயன் பெற்றுள்ளனர்.

**புனித தோமையார் ஆலயம் மாறப்பாடி**

புனித சூசையப்பர் உறவிய கூட்டமானது 16.12.2018 அன்று ஞாயிறு மாலை 6.00

மணிக்கு அருட்தந்தை ஜோசப் மங்கலாமடம் அவர்கள் தலைமையில் தூய ஆவி பாடலுடன் திருஜெபமாலை ஆரம்பமானது. இக்கூட்டத்திற்கு இயக்குநர் அஜீஷ் அட்டியில் அவர்களும் வழிகாட்டி அருட் கன்னியர் மேரிஜோயிஸ் அவர்களும் ஆனி ஜேம்ஸ் அவர்களும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்கு சுமார் 40 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அருட் கன்னியர் மேரிஜோயிஸ் அவர்கள் கிறிஸ்து எல்லோருடைய உள்ளங்களில் பிறக்க ஆயத்த படுத்த வேண்டும் என்று வகுப்பு நடத்தினார்கள். அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் ஆகாய விமானத்தின் கதையை சொல்லி கிறிஸ்து பிறப்பை குறித்து கூறினார். கூட்டமானது 7.30 மணி அளவில் நன்றி பாடலுடன் இனிதே முடிவடைந்தது.

அருட்தந்தை அஜீஷ் அட்டியில்
இயக்குநர்

---

## மரியாயின் சேனை அலுவலக மந்திரிப்பு

மறைமாவட்டத்தில் மரியாயின் சேனை இயக்கத்திற்கு இதுவரை அலுவலகம் இல்லாத காரணத்தால் சூசைபுரத்தில் செயல்பட்டுவந்தது. தற்போது படந்தாலுமூடு ஆலயத்தில் செயல்பட்டு வந்த கிறிஸ்மா திருப்பண்டநிலையத்தில் மரியாயின் சேனை அலுவலகத்தோடு அறையும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மந்திரிப்பு ஆயர் அவர்கள் தலைமையில் டிசம்பர் 8 அன்று நடைபெற்றது. மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன், பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ், கோட்டாறு பிராந்திய முன்னாள் தலைவர் திரு. யூஜின், தக்கலை கொமிச்சியத் தலைவர் திரு. பெஞ்சமின் ஜோஸ் துணைத்தலைவர் திரு. பன்னீர் செல்வம் மற்றும் மறைமாவட்ட மரியாயின் சேனையினரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

Kanyakumari Social Service Society

Educare

தக்கலை மறைமாவட்டத்திலுள்ள ஏழை மாணவர்கள் பயன்பெறும் வகையில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் Educare அலகு செயல்படுகிறது. இதில் சுமார் 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர். இந்த மாணவர்களின் கிறிஸ்மஸ் விழா ஆசீர் அரங்கத்தில் வைத்து டிசம்பர் 16 ஆம் தேதி நடைபெற்றது.

**தன்னலமற்ற பணி**

Educare கிறிஸ்மஸ் விழாவானது KKSSS இயக்குநர் அருட்தந்தை சஜி எலம்பாசேரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக அதிமுக கட்சியின் மாவட்ட செயலர் திரு. ஜான் தங்கம் கலந்துக் கொண்டு உரையாற்றும் போது இந்தியாவிலேயே அதிகம் படித்த மாவட்டம் ஆனால் வேலை வாய்ப்பு பெறுவதில் மிகவும் பின்தங்கி உள்ளோம். ஏழை மாணவர்கள் ஆங்கில புலமை அதிகரிக்க Educare திட்டம் மிகவும் பயனுள்ளது. அவர்கள் வாழ்வு உயர இது பயனுள்ளதாக அமைந்துள்ளது. துன்புற்ற ஏழை நோயாளிகள் பயன் பெறும் வகையில் அன்னை தெரசா நோய் தணிப்பு பாதுகாப்பு அலகு செயல்படுகிறது. இந்த தன்னலமற்ற பணிக்கு மாற்று கருத்தே கிடையாது இத்திட்டம் செயல்படுத்தி வரும் தந்தை அவர்களுக்கு நன்றிகளும் இதற்காக அரசு சார்ந்தும் தனிநபர் சார்ந்தும் அனைத்து உதவியை செய்ய தயாராக இருப்பதாக கூறினார்.

**கடவுளின் இரக்கம்**

விழாவில் ஜான்பால் கல்லூரி தாளாளர் அருட்தந்தை ஜார்ஜ் பொன்னையா அவர்கள் பேசும் போது கிறிஸ்து பிறந்தது ஏழை குடிசையில் ஏழ்மையின் தன்மை உணரவே அவர் இவ்வாறு பிறந்துள்ளார். எந்த ஒருவரும் கடவுளின் இரக்கத்திலிருந்து புறந்தள்ளப்பட்டவர் அல்ல. ஏழை மாணவர்கள் ஆங்கில கல்வி ஆசையை நிறைவேற்றி வரும் திட்டம் மிகப் பெரியது. இந்த மாணவ செல்வங்களோடு கிறிஸ்மஸ் கொண்டாடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைந்திருப்பதாக கூறினார். நிகழ்வுக்கு இடையே கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த நிகழ்வுகளை Educare ஒருங்கிணைப்பாளர்

அருட்சகோதரி ரீஜா அவர்கள் ஒருங்கிணைத்தார்கள். மாணவர்கள் பெற்றோர் மற்றும் அலுவலக பணியாளர்கள் என ஏராளமானோர் கலந்துக் கொண்டனர்.

**KKSSS கிறிஸ்மஸ்**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பணியாளர்களின் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் டிசம்பர் 22 ஆம் தேதி ரிரிஷிஷிஷி வளாகத்தில் நடைபெற்றது.

**பகிர்ந்தளியுங்கள்**

இதில் பணியாளர்களை இம்மானுவேல், புல்குடில், குழந்தை இயேசு என குழுக்களாக பிரித்து வாழ்த்து அட்டை தயாரித்தல், ஆடை வடிவமைத்தல் மற்றும் கிறிஸ்மஸ் பாடல் ஆகிய போட்டிகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கிறிஸ்மஸ் விழா நடைபெற்றது. இயக்குநர் தந்தை தலைமை தாங்க சிறப்பு விருந்தினராக தக்கலை புனித எலியாஸ் ஆலய பங்குதந்தை டேவிட் OCD கலந்துக் கொண்டு இவ்விழா நம் ஒவ்வொருவருக்கும் கடவுள் மகிழ்ந்தளித்த மற்றொரு பரிசு இதனை ஏற்றுக் கொண்டு நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் வாழ்த்து செல்ல வேண்டிய நேரமிது. கொண்டாட்டங்கள் உயிர் பெற வேண்டுமானால் நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும்.


**குழப்பம் இல்லாத வாழ்வு**

கிறிஸ்மஸ் அர்த்தமே அன்பர்களின் மகிழ்ச்சியில் தான் உள்ளது அளப்பரிய உங்கள் மன மகிழ்ச்சியை அனைவருக்கும் பகிர்ந்தளியுங்கள் என கூறினார். தக்கலை காவல் ஆய்வாளர் திரு. ரமேஷ் பேசும் போது குழப்பம் இல்லாமல் வாழ வேண்டுமானால் அதற்கு தேவை ஒழுங்கு முறை தைரியத்தோடும், நம்பிக்கையோடும் உறுதியோடும் ஒவ்வொரு வாய்ப்புகளை அடைவோம் வெறும் மனிதனாக மடிவது அவசியமற்றது விலங்கும் அவ்வாறே மடிகிறது. நம் வாழ் நாட்கள் பிறருக்கு பலன் இல்லையென்றால் நாமும் விலங்கினமே ஆனால் நீங்கள் மற்றவருக்கு உதவும் பணியை செய்துள்ளீர்.

KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை வினு டி ஜோசப் மற்றும் அலுவலக பணியாளர்கள், நண்பர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர். இந்த நிகழ்வுகளை திட்ட அலுவலர் ஷீபா அவர்கள் ஒருங்கிணைத்தார்கள்.

அருட்தந்தை சஜி எலம்பாசேரி
இயக்குநர்

# அருட்சகோதரர்களிடமிருந்து...




**தியானம்**

டிசம்பர் மாதம் மறைமாவட்ட அளவில் நடைபெற்ற மூன்று நாள் தியானத்தில் அனைத்து அருட்சகோதரர்களும் கலந்துக் கொண்டனர். இதில் குறிப்பாக பிள்ளைகளுக்கான பகுதியை அருட்பணி ஜினு மற்றும் அருட்பணி ஜோமோன் அவர்கள் தலைமையில் ஆடல், பாடல் மற்றும் கதைகள் என்ற வகையில் அருட்சகோதரர்களால் சிறப்பாக வழிநடத்தப்பட்டது.

**விடுமுறை**

பல இடங்களிலுமாக பல்வேறு குருத்துவக் கல்லூரிகளில் பயின்று வரும் அருட்சகோதரர்கள் அனைவரும் தங்களுடைய முதல் பருவ தேர்வை வெற்றிகரமாக முடித்து விட்டு ஒரு வார விடுமுறைக்காக வீடு திரும்பினர்.

**உஜ்ஜைன்**

உஜ்ஜைன் குருத்துவக் கல்லூரியில் பயின்று வரும் அருட்சகோதரர்கள் ஆன்றோ, லின்றோ மற்றும் விபின் ஆகிய மூவரும் நலமாக உள்ளனர். கிறிஸ்மஸ் விடுமுறை காலங்களில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடுவதற்கான வெவ்வேறு கிராமங்களுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வாண்டு கிறிஸ்மஸ் நாடக குழுவின் தலைவராக ஆன்றோ பொறுப்பேற்று வழிநடத்தினார்.

**உடல் நலன்**

உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டு கடந்த இரண்டு மாதகாலம் ஓய்விருந்த அருட்சகோதரர் அனு அவர்கள் டிசம்பர் மாதம் 19 ஆம் தேதி தக்கலை மறைமாவட்டத்தின் ஆயர் இல்லத்தை வந்தடைந்தார். அவர் தன்னுடைய அடுத்த கட்ட களப்பணியை ஆயர் இல்லத்தில் தொடரவிருக்கிறார்.

**இளங்குருமடம்**

22-12-2018 அன்று தூய மரியாள் இளம் குருமடத்தில் வைத்து கிறிஸ்மஸ் விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதில் அருட்சகோதரர்களின் ஆடல், பாடல் மற்றும் கலைநிகழ்ச்சிகள் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது. மஞ்சாலுமூடு மறைவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தையர்களும்

அருட்சகோதரிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முதலாண்டு பயிலும் இளங்குருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கான இரண்டாம் பருவத்தேர்வு டிசம்பர் 17 முதல் 21 வரை நடைபெற்றது. கிறிஸ்துமஸ் விடுமுறை 23 அன்று விடப்பட்டது. ஜனவரி 5 அன்று அடுத்த வகுப்புகள் ஆரம்பமாக உள்ளது.

**கூட்ட அறை**

முக்கூட்டுக்கல் இளங்குரு மடத்தில் புதிதாக கட்டப்பட்டு கூட்ட அறையின் உள்கட்டமைப்புப்பணி நடைபெற்று வருகிறது.

**கிறிஸ்மஸ் விழா**

உயர் குருத்துவ கல்லூரிகளில் பயின்று வரும் அருட்சகோதரர்கள் ஒன்றிணைந்து 23.12.2018 அன்று ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. குருத்துவ வாழ்வு மற்றும் குருத்துவ கல்லூரியின் பணிகளை குறித்து அனைவரோடும் பகிர்ந்து கொண்டார்கள்.

**போட்டிகள்**

மறைவட்ட அளவில் நடைபெற்ற மாணவர்களுக்கான மறைக்கல்வி போட்டிகளில் உயர் குருத்துவ கல்லூரிகளில் பயின்று வரும் அருட்சகோதரர்கள் தங்களால் இயன்ற அளவு ஒத்துழைப்பு கொடுத்து உதவி வருகின்றனர்.

அருட்சகோதரர் றோபின்
தலைவர்

---

### திருநெல்வேலி திருத்தொண்டுதளம்

அருட்தந்தை ஜினோயி மற்றும் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட் ஆகியோர் திருநெல்வேலி திருத்தொண்டுதளத்தை சார்ந்த திரு. மரிய றோபின் - திருமதி எஸ்தர் தம்பதியினரின் 25ஆம் ஆண்டு திருமண விழாவை ஏற்பாடு செய்தனர். ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் மற்றும் மறைமாவட்ட உயர்மட்ட குழுவினர் கலந்து கொண்டு திருப்பலி நிறைவேற்றி வாழ்த்தினர்.

### விதை(Seed) கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

22 அன்று மாலை 5.30 மணிக்கு குருமாணவர்களுக்கு உதவி செய்யும் அமைப்பான விதை(Seed) என்ற அமைப்பை சார்ந்த உறுப்பினர்களோடு ஆயர் அவர்கள் கேக் வெட்டி கிறிஸ்மஸ் விழாவை கொண்டாடினார். 35 பேர் பங்கேற்று சிறப்பித்தனர்.

# மறைமாவட்ட கல்வி நிறுவனங்கள்

## கிறிஸ்து பிறப்பு விழா

தக்கலை மறைமாவட்டத்திற்கு உட்பட்ட கல்வி மற்றும் இதர நிறுவனங்களுக்கான கிறிஸ்மஸ் விழாவானது 15.12. 2018 அன்றும் மதியம் 2 மணி அளவில் தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. இந்த



கிறிஸ்மஸ் விழாவானது மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் கல்வி நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் உட்பட 20 நிறுவனங்களை சார்ந்த தலைமை பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர். நிகழ்வின் தொடக்கமாக அனைத்து பள்ளிகளின் தாளாளர் அருட்தந்தை ஜோண்சிலால் அவர்கள் வரவேற்று பேச அதனை தொடர்ந்து ஆயர் அவர்கள் அனைத்து நிறுவனங்களை பற்றியும் அவற்றின் செயல்பாடுகள் குறித்தும் கேட்டறிந்தார். மேலும் காரோடு DNN- ஐ சார்ந்த அருட்சகோதிரி அவர்கள் அழகாகவும் ஆழமாகவும் கிறிஸ்மஸ் செய்தியினை வழங்கினர்.

பின்னர் ஆயர் அவர்கள் கிறிஸ்மஸ் கேக்கினை அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துகொண்டு மறைமாவட்டத்தில் கல்வி நிறுவனங்களின் பங்கு மற்றும் நிறுவனங்களின் செயல்பாடுகள் அனைத்தையும் பாரட்டி தற்போதய காலச்சூழலுக்கு ஏற்றவாறு நம்மையும் நம் நிறுவனங்களையும் வளர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கல்வி நிறுவனங்களில் சாரணர் சாரணியர் இயக்கம் செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் உரையாற்றி அனைவருக்கும் கிறிஸ்மஸ் பரிசினை வழங்கி கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்தார். அதை தொடர்ந்து வாறுதட்டு, MMKM உயர்நிலை பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு சத்தியதாஸ் அவர்கள்

நன்றி கூற விழா நிறைவுற்றது.

**MATHS INTERVIEW-RANK LIST**

27-11-2018 அன்று மறைவட்ட அளவில் நடைபெற்ற கணித ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட பட்டதாரிகளில் முதல் ஐந்து இடங்களை பிடித்த பட்டதாரிகளின் பெயர் மற்றும் தர வரிசை கொடுக்கப்பட்டுள்ளது.

| Code No | Name | Rank |
|---|---|---|
| MAT-009 | Mary Suja J S | 1 |
| MAT-015 | Suji Lekshmi J | 2 |
| MAT-014 | Satheesh F | 3 |
| MAT-007 | Lefiya Sony S V | 4 |
| MAT-006 | Shalini D | 5 |

**BEd பட்டதாரிகளுக்கான வழிகாட்டுதல் முகாம்**

தக்கலை மறைமாவட்டத்திற்கு உட்பட்ட B.Ed முடித்த மற்றும் B.Ed படித்துக் கொண்டிருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிக் கொள்வதற்கு தேவையான பயிற்சிகளை அளிப்பதற்கான கருத்தரங்கம் 09.12.2018 அன்று சூசைபுரம், புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. இதில் நமது மறைமாவட்டத்தை சார்ந்த 22 பட்டதாரிகள் கலந்துக் கொண்டனர். இக்கருத்தரங்கினை நமது மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் சிறப்புரை ஆற்றி துவங்கி வைத்தார். மேலும் இக்கருத்தரங்கில் புனித அல்போன்சா மெட்ரிக் மேல்நிலை பள்ளியின் தாளாளர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில், புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தாளாளர் அருட்தந்தை ஆன்றணி ஜோஸ் மற்றும் அனைத்து பள்ளிகளின் தாளாளர் அருட்தந்தை ஜோண்சிலால் அவர்களும் கலந்துக் கொண்டனர். இக்கருத்தரங்கில் ஆசிரியர் பணிக்கு பட்டதாரிகளை தயார் செய்வதற்கான ஊக்குவித்தல் மற்றும் வழிக்காட்டுதலுக்காக, உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி



திரு. ஆன்றோ சேவியர் அவர்கள் கலந்துக் கொண்டு பட்டதாரிகளோடு உரை ஆற்றினார்கள். நிகழ்வின் இறுதியில் Questionare வழங்கப்பட்டு புள்ளிவிபரம் சேகரிக்கப்பட்டது. இக்கருத்தரங்கானது மதியம் 2.30 மணிக்கு ஆரம்பமாகி 4.00 மணி அளவில் நிறைவுற்றது.

**1.கார்மல் மாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கோவளம், கன்னியாகுமரி**

* 30-11-2018 அன்று தமிழ்நாட்டில் கஜா புயலால்



பாதிக்கப்பட்ட மக்களுக்காக எம் மாணவர்கள் தங்களால் இயன்ற பொருட்களை கொண்டு வந்தனர். பின்னர் அப்பொருட்களை SP அலுவலகம் மூலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

* கிறிஸ்து பிறப்பு விழாவினை முன்னிட்டு எம் பள்ளியில் 12-12-2018 அன்று கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. Rev .Fr .Thomas Pokkaivaraithu CML Principal of Christ Central School, Anjugramam அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்து கிறிஸ்மஸ் செய்தியினை மாணவர்களுக்கு அறி வித்தார்கள்.

* பிறரன்பு பணியில் இறைவனை காண்பாய் எம் பள்ளியின் அருட் சகோதிரிகள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து 18-12-2018 அன்று மன நலம் குன்றியவர்களுக்காக நடத்தும் சாந்தி பவன் இல்லத்திற்கு சென்று கிறிஸ்மஸ் வாழ்த்து செய்தியினை தெரிவித்தும் இனிப்புகள் வழங்கியும் மகிழ்ந்தனர்.

* 19-12-2018 அன்று புனித வளானர் முதியோர் இல்லம் சென்று ஆதரவற்ற முதியவர்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்து செய்தியினை தெரி



வித்தும் இனிப்புகள் வழங்கியும் ஆசீர் பெற்று வந்தனர்.

2.திருக்குடும்ப மேல்நிலைப் பள்ளி முக்கூட்டுக்கல்

01-12-2018 அன்று உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு நாளை முன்னிட்டு பேரணியை பள்ளி தலைமையாசிரியை முன்னிலையில் நாரயணகுரு பொறியியல் கல்லூரி முதல்வர் தொடங்கி வைத்தார்கள். இந்த பேரணியானது முக்கூட்டுக்கல் சந்திப்பிலிருந்து தொடங்கி மஞ்சாலுமூடு சந்திப்பு வரை சென்றது. பேரணியின் முடிவில் மஞ்சாலுமூடு சந்திப்பில் வைத்து சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் எய்ட்ஸ் விழிப்புணர்வு தெரு நாடகம் மற்றும் பல கலைநிகழ்ச்சிகளை நடத்தினார்கள். இடைக்கோடு அரசு மருத்துவ சுகாதார நிலையத்திலிருந்து ஆய்வாளார் அவர்கள் எய்ட்ஸ் குறித்து சிறப்புரையாற்றினார்கள்.

**போதை விழிப்புணர்வு**

போதை விழிப்புணர்வை குறித்து 11 மற்றும் 12 வகுப்பு மாணவர்களுக்கு கருத்தரங்கம் 06.12.2018 அன்று மதியம் 2.00 மணி முதல் 5.00 மணி வரை நடைபெற்றது. இக்கருத்தரங்கை சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் சிலரும் ஆசிரியர்கள் மற்றும் நாகர்கோவிலில் உள்ள போதை பொருள் விழிப்புணர்வு அமைப்பும் இணைந்து நடத்தியது.

**அரையாண்டு தேர்வு**

அரையாண்டு தேர்வானது 10.12.2018 அன்று தொடங்கி நல்ல முறையில் நடைபெற்றது.

**சாரண சாரணியர் இயக்கம்**

சாரண சாரணியர்களின் ஜனாதிபதி விருதுக்கான ஒரு நாள் பயிற்சி முகமானது 08.12.2018 அன்று விளவன்கோடு அரசு மேல் நிலைப்பள்ளியில் வைத்து நடைபெற்றது. 11 மாணவர்களும் திரு. ஜஸ்டஸ் ஆசிரியரும் பங்கு கொண்டனர்.

**3. மார் மத்தேயு காவுகாட்டு நினைவு உயர்நிலைப்பள்ளி வாறுதட்டு**

22-12-2018 அன்று விளையாட்டுவிழா பள்ளி நிர்வாகி அருட்தந்தை ஜோசப் ஒற்றலாங்கல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 15-12-2018 அன்று நடைபெற்ற 8ம் வகுப்பு மாணவர்களுக்கான NNMS போட்டி தேர்வில் 8 மாணவர்கள் கலந்துகொண்டனர். Showt மாணவர்களுக்கான டிசம்பர் 6,7, 8 தியதிகளில் கன்னியாகுமரி விவேகனந்தா கேந்திரத்தில் வைத்து நடைபெற்ற முகாமில் 11 மாணவர்களும் 1 ஆசிரியரும் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை ஜோண்சிலாஸ்
இயக்குநர்

# புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி

**கவின் கலை மன்றம்**

புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கவின் கலை மன்றத்தின் சார்பாக முப்பெரும் விழா கொண்டாடப்பட்டது. 19.12.2018 அன்று கிறிஸ்து பிறப்பு விழா கல்லூரி கலையரங்கில் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தலைமையில் கல்லூரி மாணவ, மாணவிகளுடைய கலை நிகழ்ச்சிகள் துறைவாரியாக குடில் போட்டி, கிறிஸ்மஸ் பாடல் போட்டிகள் நடைபெற்றன. இந்நிகழ்விற்கு சிறப்பு அமைப்பாளராக தக்கலை மறைமாவட்ட பொருளாளர் பேரருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் கலந்துக் கொண்டு கிறிஸ்து பிறப்புச் செய்தி வழங்கினார். அதன் பின்பு மாணவ, மாணவியர் மற்றும் பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்களுக்கிடையேயான கிறிஸ்மஸ் பரிசு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

**அல்கிரேயட்டிகா 2018**

20.12.2018 அன்று கவின் கலை மன்றத்தின் மூலமாக "அல்கிரேயட்டிகா 2018" துறைகளுக்கிடையேயான கலைத்திறன் போட்டிகள் துவங்கப்பட்டது. இப்போட்டிகளின் நிறைவு விழா 21.12.2018 அன்று கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு விஜய் தொலைக்காட்சி கலக்கப்போவது யாரு, சிரிச்சா போச்சு, அது இது எது போன்ற தொடர்களின் நகைச்சுவை நடிகர் திரு. நாஞ்சில் விஜயன் கலந்துக் கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தினார். இந்நிகழ்வில் புலரி கலைத் தொடர்வு மையத்தின் இயக்குநர் அருட்தந்தை ஜினு சிறப்பு பேச்சாளராக பங்கேற்றார். பரிசுகளை கவின் கலை மன்றத்தின் இயக்குநர் முனைவர் சுதர்லின் பால் மற்றும் ஒருங்கிணைப்பாளர் பேரா. ஆசாமேரி, பேரா. மதன் குமார் அறிவித்தனர். இந்தக் கொண்டாட்டத்தின் இறுதியுரையை கல்லூரி முதல்வர் இசையாஸ் போட்டிகள் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களையும், பார்வையாளர்களை பாராட்டினார். அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு

வாழ்த்துக்களை அறிவித்து விழாவினை நன்றி கூறி நிறைவு செய்தார். இந்நிகழ்ச்சிகான ஏற்பாடுகளை கல்லூரி நிர்வாகம், பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.

அருட்தந்தை ஆன்றணி ஜோஸ்
தாளாளர்

---

## ஆயர் இல்ல அயலாரோடு கிறிஸ்மஸ் கூடுகை

தக்கலை ஆயர் இல்லத்தின் அருகாமையில் வசிப்பவர்களோடு இணைந்து கிறிஸ்மஸ் விழா அன்பின் கூடுகை என்னும் தலைப்பில் 20.12.2018 வியாழக்கிழமை அன்று மாலை 6.00 மணிக்கு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் ஆயர் இல்ல அரங்கில் நடைபெற்றது. தொடக்க ஜெபத்தினைத் தொடர்ந்து மறைமாவட்ட ஆவண காப்பாளர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். அமலா கான்வெண்ட் அருட்சகோதரி ஸிற்றி கிறிஸ்மஸ் செய்தியை வழங்கினார். ஆயர் தலைமையில் அனைத்து குடும்ப உறுப்பினர்களின் பிரதிநிதிகள் இணைந்து கிறிஸ்மஸ் கேக் வெட்டப்பட்டது. ஆயர் அவர்கள் இரண்டாவது ஆண்டு இவ்விழா கொண்டாடுவதில் மகிழ்ச்சி என்றும், அனைவரையும் பார்த்து பேச கிடைத்த வாய்ப்பு என்றும் மறைமாவட்டம் ஆன்மீக மற்றும் பொருளாதார உதவிகளை செய்கிறது என்றும் தமது தலைமையுரையில் தெரிவித்தார். திரு. எட்வின்சன் அவர்கள் கிறிஸ்மஸ் செய்தி வழங்கினார். அவர் தமது வாழ்த்துரையில் கிறுஸ்துவின் பிறப்பு, வாழ்வு, இளமை ஆகியவை பிறருக்கு வாழ்வை கற்றுக் கொடுப்பதாக இருந்தது. நமது வாழ்வும் அவ்வாறு அமைய வேண்டும் என்றார். திரு. கிருஷ்ணன் நாயர் மற்றும் திரு. ஜெயக்குமார் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார். பிலாங்காலை ஆசிரமப் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. CMC அருட்சகோதரிகளும் அமலா கான்வெண்ட் அருட்சகோதரிகள் மற்றும் சுற்றியுள்ள குடும்பத்தார் என சுமார் 75 பேர் பங்கேற்றனர். அருட்சகோதரி றீஜா அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். நிகழ்ச்சிகளை திருமதி அருள்மதி தொகுத்து வழங்கினார்.

# சீனாய் தியான இல்லம்


| ஜனவரி மாதம் நடைபெற இருக்கும் சிறப்பு தியானங்கள் | | |
|---|---|---|
| கண்விழிப்பு ஆராதனை | ஜனவரி 11<br>வெள்ளிக்கிழமை<br>இரவு 9.00 மணி முதல்<br>காலை 5.30 மணி வரை | வழிநடத்துபவர்<br>சீனாய் தியான குழு |
| ஜெபமாலை அபிஷேக தியானம் | ஜனவரி 18<br>வெள்ளிக்கிழமை<br>காலை 9.30 மணி முதல்<br>மதியம் 2.00 மணி வரை | வழிநடத்துபவர்<br>சீனாய் தியான குழு |
| நோய்களிலிருந்து குணமளிக்கும் தியானம் | ஜனவரி 26<br>சனிக்கிழமை<br>காலை 9.30 மணி முதல்<br>மதியம் 2.00 மணி வரை | வழிநடத்துபவர்<br>சீனாய் தியான குழு |

## மறைமாவட்ட நற்செய்தி பெருவிழா

30.12.2018 முதல் 02.12.2018 காலை 9.00 மணிக்கு ஜெபமாலையுடன் நற்செய்தி பெருவிழா ஆரம்பமானது. தொடர்ந்து மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் நற்செய்தி ஒளி ஏற்றி துவக்க உரையாற்றி தொடங்கி வைத்தார். உலகுக்கு ஒளி கொடுக்கும் நற்செய்தியை கையில் ஏந்தி குருகுல முதல்வர். பேரருட்தந்தை ஜோஸ்முட்டத்துப் பாடம் அவர்கள் தலைமையில் அனைத்து குருவானவர்களும் இணைந்து விவிலியப்பவனியை நடத்தினர். இறைவார்த்தை பகிர்தல் மக்களின் உள்ளங்களில் விவிலிய இறை வார்த்தைகளை விதைக்க செய்தவர்கள் அருட்தந்தை மரியவியானி, திருத்தொண்டர் டேவிட் கிறிஸ்டோபர்

"தூயஆவி உங்களிடம் வரும் போது நீங்கள் கடவுளது வல்லமையைபெற்று எருசேலமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடைஎல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீகள்." (தி.பணி 1.8)

அருட்தந்தை வில்லியம் ஹவாஸ்கர் அருட்சகோதரர் சதீஷ் ஆகியோர் இறைவார்த்தையை பகிர்ந்து நற்செய்தியை வழிநடத்தினர். பாவசங்கீர்த்



தனமும், திருப்பலியும், குணமளிக்கும் ஆராதனையும், நற்செய்தி பவனியும் நடைபெற்றது. 2018 ஆம் ஆண்டு குருப்பட்டம் கிடைத்த அருட்தந்தையர்கள் முதல் நாள் திருப்பலியும், மறைவட்ட பேரருட்தந்தையர்கள் 2ம் நாள் திருப்பலியும், ஆயருடன் இணைந்து குரியா பேரருட்தந்தையர்கள் 3 ம் நாள் திருப்பலியும் ஒப்புகொடுத்து ஜெபித்தனர். இறுதியாக நற்கருணை இறுதி ஆசிருடன் நற்செய்தி பெருவிழா நிறைவடைந்தது.

கிறிஸ்டின் தியானம்

01.12.2018 மற்றும் 02 .12.2018 ஆகிய தேதிகளில் குழந்தைகளுக்கான தியானம் ஆசீர் அரங்கத்தில் வைத்து அருட்தந்தை ஜோமோன் மங்கலமடம் அவர்கள் தலைமையில் சீரும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நற்செய்தி பெருவிழாவில் 2000 க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டு இறை ஆசீர் பெற்றுக்கொண்டனர் இவை அனைத்தையும்ஒருங்கிணைந்து வழிநடத்தியவர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் ஆவார்.

அருட்தந்தை மிஜோ செபாஸ்டின்
இயக்குநர்

---

**அருட்தந்தை தோமஸ் தெக்கேல் அவர்களின் ஐந்தாமாண்டு நினைவு தினம்**

அருட்தந்தை தோமஸ் தெக்கேல் அவர்களின் ஐந்தாமாண்டு நினைவு தினம் அவரது சொந்த பங்கான மாங்குளத்தில் டிசம்பர் 14 அன்று அனுசரிக்கப்பட்டது. பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன், அருட்தந்தை தங்கச்சன் சச, அருட்தந்தை சாஜன் நெட்டபொங்கு, அருட்தந்தை போஜி பறம்பில்பறம்பில் மற்றும் அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் ஆகியோர் கலந்து கொண்டு திருப்பலி நிறைவேற்றி அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபித்தனர்.

# மறைவட்ட செய்திகள்




## குழித்துறை மறைவட்டம்

**பாலப்பள்ளம்**

* டிசம்பர் 16 அன்று பங்கு பொதுமன்றம் நடைபெற்றது. இதில் கல்லறைத் தோட்ட விதிமுறைகள் சமர்பிக்கப்பட்டது.

* டிசம்பர் 24 அன்று கிறிஸ்மஸ் திருப்பலி, பவனி, குடில் திறப்பு விழா மற்றும் கேக் வெட்டி கொண்டாடினர்.

* டிசம்பர் 25 அன்று காலை முதியோர்களுக்கும், நோயாளிகளுக்கும் சிறப்பு திருப்பலி மற்றும் படுக்கை நோயாளிகளின் வீடுகளுக்கு சென்று நற்கருணை வழங்கப்பட்டது.

**மாங்கரை**

* டிசம்பர் 23 மற்றும் 27 ஆகிய தியதிகளில் புதுநன்மை வழங்குதல் நிகழ்வு நடைபெற்றது.

* டிசம்பர் 24 கிறிஸ்மஸ் திருப்பலி மேதகு ஆயர் மார் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

* டிசம்பர் 28 மாசில்லா குழந்தைகள் தின திருப்பலியும், அனைத்து குழந்தைகள் தலையிலும் கைவைத்தல் ஆசீர்வாதம் நடைபெற்றது.

* டிசம்பர் 30 திரு. ரவிக்குமார் தலைமையில் குழந்தைகளுக்கான Parliament Meeting நடைபெற்றது.

**கிள்ளியூர்**

* எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் சிறப்பு ஆராதனை நடைபெற்று வருகிறது.

* கிறிஸ்மஸ் சிறப்பு திருப்பலி மற்றும் ஆராதனை நடைபெற்றது.

* டிசம்பர் 28 அன்று மாசில்லா குழந்தைகள் தினத் திருப்பலியும், ஆராதனையும் நடைபெற்றது.

* டிசம்பர் 30 அன்று மிஷன் லீக் சார்பில் திருத்தொண்டு வாரத்தை முன்னிட்டு 20 மாணவர்களும், மறைக்கல்வி ஆசிரியர்கள், அருட்சகோதரர் அஜின் ஆகியோர் இணைந்து ஒவ்வொரு குடும்பங்களையும் சந்தித்து அவர்களுடன் ஜெபித்தனர்.

**முஞ்சிறை**

* டிசம்பர் 8 ஆம் நாள் அமலோற்பவ மாதா திருநாள் ஜெபமாலை மற்றும் ஜெபமாலை பவனி திருப்பலியோடு மிகச்

சிறப்பாக கொண்டாடப்பட்டது.

* 13-12-2018 அன்று மாலை சிறப்பு நற்கருணை ஆராதனையும் நோயாளிகளுக்கான ஜெப வழிபாடும் திருப்பலியும் நடைபெற்றது.

* 20-12-2018 அன்று அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் நற்கருணை ஆராதனை மற்றும் இறை வார்த்தை வழிபாட்டை வழிநடத்தி சிறப்பித்தார். இறைமகன் ஈசோவின் பிறப்பிற்கு ஆயத்தமாகஒப்புரவு வழிபாட்டை நடத்தினார்.

* 27-12-2018 அன்று ஒரு வருடம் இறைவன் கொடுத்த எல்லா நன்மைகளுக்கும் நமது வாழ்வில் ஏற்பட்ட எல்லா தோல்விகளுக்கும் நன்றி சொல்வோம் என்று கூறி ஜெபித்தார்.

**கிறிஸ்மஸ் விழா**

22-12-2018 அன்று மாலை மறைக்கல்வி மாணவ மாணவிகளின் கிறிஸ்மஸ் விழா நடைபெற்றது. அனைத்து பிள்ளைகளும் ஆசிரியர்களும் கலந்துக் கொண்டு சிறப்பித்தார்கள். தங்களுக்கென்று கிடைத்த நண்பர்களுக்காக ஜெபித்து பரிசுப் பொருட்கள் வழங்கி கிறுஸ்து பிறப்பின் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்கள். அருட்தந்தை அவர்கள் சிறு கதை மூலம் வாழ்த்துச் செய்தியை பகிர்ந்து கொண்டார். ஆசிரியர் வின்சென்ட்ராஜ் அவர்கள் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தி வழங்கினார். கலை நிகழ்ச்சிகள் மற்றும் கிறிஸ்மஸ் தாத்தாக்களின் நடனம் நடைபெற்றது. ஆசிரியர் சினேகலதா நன்றிக் கூற விழா இனிதே நிறைவுற்றது. 24-12-2018 அன்று இரவு 10.30 மணிக்கு கிறிஸ்மஸ் பாடல் போட்டிகள் உறவியம் வாயிலாக நடைபெற்றது. 11.30 மணிக்கு கிறிஸ்து பிறப்பு திருப்பலி மற்றும் பவனி நடைபெற்றது. சகே. றோபின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வழங்கினார்.

**குழந்தைகள் திருநாள்**

28-12-2018 அன்று மாசில்லா குழந்தைகள் திருநாள் கொண்டாடப்பட்டு அனைத்து குழந்தைகளுக்காக ஜெபித்து இனிப்பு வழங்கினார். 31-12-2018 அன்று இரவு 10.30 மணிக்கு சிறப்பு நற்கருணை ஆராதனையும் புத்தாண்டு சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது.

**வாறுதட்டு திருவிழா**

மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கி கொண்டாலும் தம் வாழ்வை இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன என்ற இறைவார்த்தையை தன் உள்ளத்தில் ஏற்று தன்னையே இறைவனுக்கு அர்ப்பித்தவர்

தூய சவேரியார். அவருடைய பாதுகாவலில் வாறுதட்டு பங்கு வளர்ந்து வரும் சூழலில் பங்கின் திருவிழா 05-12-2018 முதல் 10-12-2018 முடிய ஆறு நாட்கள் சிறப்பாக நடைபெற்றது.

முதல் நாள் மாலை 6.00 மணிக்கு ஜெபமாலை தொடர்ந்து அருட்தந்தை ஜோஸ் ஒட்டலாங்கல் அவர்கள் திருக்கொடி ஏற்ற அருட்தந்தை ஜோண்சிலால் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்கள். பின்னர் சீனாய் தியான குழுவினரால் நற்செய்தி பெருவிழா 3 நாட்கள் நடைபெற்றன.

4 ஆம் நாள் திருப்பலியை தொடர்ந்து இன்னிசை மேளத்துடன் பவனியும் நேர்ச்சை இனிப்பு வழங்கப்பட்டது. 5 ஆம் நாள் இராசா திருப்பலி அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் மற்றும் அஜீஸ் அட்டியில் ஆகியோர் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. மாலை பக்த இயக்கங்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 6 ஆம் நாள் இறந்தோருக்கான சிறப்பு திருப்பலி தொடர்ந்து திருக்கொடி இறக்குதல் முடிவில் புனித அந்தோணியார் நாட்டிய நாடகமும் நடைபெற்றது.

கிறிஸ்மஸ் விழா

24-12-2018 அன்று இரவு கிறிஸ்து பிறப்பு சிறப்பு திருப்பலியும் 31-12-2018 அன்று நற்கருணை ஆராதனையும் புத்தாண்டு சிறப்பு திருப்பலியும் மறைவட்டத்திற்கு உட்பட்ட எல்லா பங்குகளிலும் நடைபெற்றது.

தகவல்: திருமதி செலின் மேரி|திருமதி ஸ்னேக லதா|திருமதி ஹேமா

## மதுரை கிறிஸ்துமஸ் கூடுகை

டிசம்பர் 16 அன்று காலை 8.15 மணிக்கு ஆயர் அவர்கள் மதுரை திருத்தொண்டுதளத்தின் புனித சாவறா ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார். தொடர்ந்து கிறிஸ்து பிறப்பு விழா கூடுகை அருட்தந்தை அனீஷ் செறுபறம்பில் அவர்களின் வழிகாட்டலில் நடைபெற்றது. ஆயர் அவர்கள் கிறிஸ்துமஸ் கேக் வெட்டி வாழ்த்து செய்தி வழங்கினர். அருட்சகோதரிகள் றோஸ்லின் மற்றும் மிஸி மரியா ஆகியோரது தொடர் வீடு சந்திப்பு முயற்சியால் 35ஆக இருந்த இறைமக்களின் எண்ணிக்கையும் 48 ஆக உயர்ந்தது. அருட்தந்தை அனீஷ் மற்றும் அருட்சகோதரிகளின் முயற்சிக்கு பாராட்டுகள்.

# செங்கோட்டை செய்திகள்

**கிறிஸ்மஸ் கொண்டாட்டம்**

செங்கோட்டை மறைபரப்பு பணியாளர்களின் கூடுகை மற்றும் கிறிஸ்மஸ் கொண்டாட்டமானது 16.12.2018 அன்று புளியரை ஆலயத்தில் ஆயர் மற்றும் ஆவணக் காப்பாளர் அருட்தந்தை சத்தியநேசன் அவர்களுடன் இணைந்து கொண்டாடப்பட்டது. மதுரை மறைத்தளத்தை சேர்ந்த அருட்சகோதரி ரோஸ்லின் மற்றும் அருட்சகோதரி மிஸ்ஸி மரியாவும் இதில் பங்கெடுத்து மகிழ்ந்தனர். கிறிஸ்மஸ் தினவிழாவினையொட்டி அருட்தந்தை ஷினோய் எம்.சி.பி.எஸ் அவர்கள் போட்டிகளைபொறுப்பேற்றுநடத்தினார். வெற்றியாளர்களுக்கு ஆயர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். அனைவரும் ஒருவருக்கொருவர் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை பரிமாறினர். இக்கூடுகையை அருட்தந்தை செபி அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார். இறுதியில் அன்பு விருந்துடன் நிறைவுற்றது.

**மிஷன் லீக் கூடுகை**

மிஷன் லீக் உறுப்பினர்கள் 16.12.2018 அன்று வாஞ்சி சி.எம்.சி கன்னியர் இல்லத்தோடு சேர்ந்து செயல்படுகின்ற புனித எவுபிராசியா சிறப்பு பள்ளிக்கூடத்திலுள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகளுடன் சேர்ந்து கிறிஸ்மஸ் தினவிழாவினை கொண்டாடினர். அருட்தந்தை ராஜேஷ் எம்.சி.பி.எஸ் மற்றும் அருட்சகோதரி ஜென்னி சி.எம்.சி அவர்கள் இந்நிகழ்வை பொறுப்பேற்று நடத்தினர்.

**மாதர் ஜோதிஸ் போட்டிகள்**

மாதர் ஜோதிஸிலுள்ள அன்னையர்களுக்கு பழக்கலவை உண்டாக்கும் போட்டி 22.12.2018 அன்று புதூர் பள்ளிக் கூடத்தில் வைத்து நடைபெற்றது. இதில் வாஞ்சி முதல் இடம் மேக்கரை இரண்டாம் இடம் புதூர் மூன்றாம் இடம் பிடித்தது. வெற்றியாளர்களுக்கு அருட்தந்தை ரெஜீ எம்.சி.பி.எஸ் மற்றும் அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் இணைந்து பரிசுகளை வழங்கினர்.

**இளைஞர் இயக்கம்**

இளைஞர் இயக்கத்தின் தலைவர்களுக்கான கூடுகையானது 23.12.2018 அன்று புதூர் பள்ளிக்கூடத்தில் வைத்து அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இளைஞர்கள் எப்படி செயல்பட வேண்டுமென்பதை பற்றியும்,

தலைவர்களின் பொறுப்புகளை பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. பின்பு கேக் முறித்து கிறிஸ்மஸ் வாழ்த்துக்களையும் பரிமாறினர். இறுதியில் திரு. ஆசிர் அவர்கள் நன்றி கூற கூடுகை நிறைவுற்றது.

அருட்தந்தை ஜாண்பால்
ஒருங்கிணைப்பாளர்

---

## எஸ்.ஏ.பி.எஸ், சி.எம்.சி, துறவற சபையின் புதிய நிர்வாகக்குழு

சி.எம்.சி துறவற சபையில் சாவறா தக்கலை துணைமாகாண கூடுகை டிசம்பர் 8 முதல் 11 வரை நடைபெற்றது. இதில் தக்கலை துணைமாகாணத்திற்கு புதிய நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| மாகாண தலைவி | அருட்சகோதரி ஆலிஸ் விஜி சி.எம்.சி |
| துணைத்தலைவி | அருட்சகோதரி வினயா விஜி சி.எம்.சி |
| பிரதிநிதி உறுப்பினர் | அருட்சகோதரி செலிகிரின் சி.எம்.சி<br>அருட்சகோதரி மெர்சினா ஜோஸ் சி.எம்.சி<br>அருட்சகோதரி சோனா றோஸ் சி.எம்.சி |
| மாகாணச் செயலர் | அருட்சகோதரி கிறிஸ்டி மரியா சி.எம்.சி |
| நிதிச்செயலர் | அருட்சகோதரி றோஸ்லெட் சி.எம்.சி |
| தணிக்கையாளர் | அருட்சகோதரி மரிய மார்டின் சி.எம்.சி |

இதைப்போன்று எஸ்.ஏ.பி.எஸ் துறவற சபையின் சங்ஙனாச்சேரி மாகாண கூடுகை டிசம்பர் 8 முதல் 13 வரை நடைபெற்றது.

| | |
|---|---|
| மாகாண தலைவி | அருட்சகோதரி ஆன்சிட் எஸ்.ஏ.பி.எஸ் |
| துணைத்தலைவி | அருட்சகோதரி ஆலிஸ் எஸ்.ஏ.பி.எஸ் |
| பிரதிநிதி உறுப்பினர் | அருட்சகோதரி விமலா எஸ்.ஏ.பி.எஸ்<br>அருட்சகோதரி மெர்சினாஜோஸ் எஸ்.ஏ.பி.எஸ்<br>அருட்சகோதரி லிட்டி எஸ்.ஏ.பி.எஸ் |
| நிதிச்செயலர் | அருட்சகோதரி தெரசா எஸ்.ஏ.பி.எஸ் |

## எஸ்.எச் சங்ஙனாச்சேரி மாகாண தலைவி அருட்சகோ. மெர்சிட்டா

எஸ்.எச் துறவற சபையின் அருட்சகோதரி மெர்சிட்டா அவர்கள் கடந்த மாதம் நடைபெற்ற கூடுகையில் சங்ஙனாச்சேரி மாகாணத்தின் தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அருட்சகோதரி அவர்கள் மறைமாவட்டத்தின் முன்னோடி திருத்தொண்டுபணியாளர் மற்றும் முக்கூட்டுக்கல் திருக்குடும்ப மேனிலைப்பள்ளியின் தலைமையாசிரியையாக பணியாற்றிவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# BIRTHDAYS & FEASTDAYS OF REV FATHERS

| BIRTHDAYS - JANUARY | |
|---|---|
| Rev. Fr. Anto Prabin CMI | 01 |
| Rev. Fr. Chacko Basil CMI | 07 |
| Rev. Fr. Ajin Jose | 17 |
| Rev. Fr. Saji Elembasserril | 17 |
| Rev. Fr. Luka Kollamparampil CMI | 17 |
| Rev. Fr. Toji Parampilparampil | 18 |
| Rev. Fr. Sumesh Valliyamthadathil | 18 |
| Rev. Fr. Sanil Panthichirackal | 20 |
| Rev. Fr. Printo Kurias | 21 |
| Rev. Fr. Antony Chundelikkatt | 24 |
| Rev. Fr. Lijo Thekkel | 24 |
| Rev. Fr. Geo Choozhikunnel | 26 |
| Rev. Fr. Jomon Mangalamadom | 26 |

| FEASTDAYS - JANUARY | |
|---|---|
| Rev. Fr. Sanil Panthichirackal | 03 |
| Rev. Fr. Johnsilal Arackaparampil | 03 |
| | |
| Rev. Fr. Davis Karukappally CMI<br>Rev. Fr. Justin Cheruvelil<br>Rev. Fr. Mijo Puthenpurayil<br>Rev. Fr. Robin Kurumullil<br>Rev. Fr. Sam Puthuparampil CMI<br>Rev. Fr. Sebi Manimalakandathil | 20 |

## BISHOP'S ENGAGEMENTS JANUARY 2019

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Tue | 9.30 - 4 | Arukani Forane: Meeting Rev. Fathers of Diocese |
| 2 | Wed | 9.30 - 4 | Arukani Forane: Meeting Rev. Fathers of Diocese |
| | | 06.30 pm | Thuckalay CMC : Holy Qurbana |
| 3 | Thu | 09-03 pm | Bishop's House: Ad Limina report meeting |
| | | 05.00 pm | Thadikkarakonam : Altar Blessing |
| 4 | Fri | 9.30 - 4 | Manjalu. Forane: Meeting Rev. Fathers of Diocese |
| | | 04.30 pm | Kazhuvanthittai : School Annual Day |
| 5 | Sat | 11.00 am | Thottakadu, Chy: Marriage Holy Qurbana |
| 6 | Sun | - | Changanassery |
| 7-18 | Mon | - | Kakkanadu: Synod |
| 19 | Sat | 10.00 am | Kalloor: Death Anniversary Holy Qurbana |
| 20 | Sun | - | >> Madurai |
| 21-22 | Mon | - | Madurai : TNBC |
| 23 | Wed | | Bishop's House |
| 24 | Thu | 10.00 am | Kanyakumari: School Annual Day |
| 25 | Fri | 10.00 am | Bishop's House: Financial Review Meeting |
| | | 05.00 pm | Christurajapuram: School Annual Day |
| 26 | Sat | 08.00 am | Bishop's House: Meeting with Rev. Fr. Koottummel |
| | | 10.00 am | Mukkuttukal: Home Day at Minor Seminary |
| | | 04.30 pm | Paruthivilai: Silver Jubilee of Santhi Nilayam |
| 27 | Sun | 06.00 am | Madathattuvilai: Holy Qurbana |
| 28 | Mon | - | Picnic with Rev. Fathers of Diocese |
| 29 | Tue | 09.30 am | Sangamam: Priests' Conference |
| | | 06.00 pm | Arukani : Holy Qurbana, SH Convent |
| 30 | Wed | 10.30 am | Thoothukudy: Marriage Holy Qurbana |
| | | 04.00 pm | Shenkottai: Mission Visit |
| 31 | Thu | 09.30 - 4 | Meeting Rev. Fathers of Diocese |
| | | 06.30 pm | Mukkuttukal : Minor Seminary |

Fr. Sajan Nettaponghu/Bishop's Secretary



Christmas Celebration at Shenkottai 16.12.2018



Christmas Celebration for Priests 18.12.2018



CRI Christmas & Pirappu Thirunal Liturgical Text Release 22.12.2018



SEED, Sponsor A Seminarian Gathering 22.12.2018



Kerala Flood Relief Fund Handing Over 28.12.2018



Gaja Cyclone Relief Materials, Puthukottai - KKSSS 3.12.2018



Gaja Cyclone Relief Materials, Pattukottai - TCYM 11.12.2018

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570